


# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 401**

**பொருளடக்கம்**


நோவாவின் பேழை ................................. 2

மாபெரும் ஜலப்பிரளயம் .......................... 5

ஜலப்பிரளயம் உலகலாவியதா ? ............. 10

ஆதி. 6 : 19, 20 வசனங்களை 7 : 2, 3 வசனங்களோடு இசைவு படுத்துதல்........ 11

பேழை தயாரிப்பில் நோவாவின் நோக்கம்.... 11


தேவன் முன்பாக நோவாவின் நிலை .......... 11


**BS Tamil Version - 16**

# நோவாவின் பேழையைக் கண்டதாக வெளியிடப்பட்ட செய்திகள்

***Reported Sightings of Noah's Ark***

### இது நோவாவினுடைய பேழையின் ஓர் பாகமா?



1 1/2 கெஜ நீளமுள்ள ஓர் மரத்துண்டை நான் வெட்டி எடுத்தேன். அதன் எடை என்னைப் பிரமிக்கச் செய்தது. நான் ஏணிக்குத் திரும்பச் சென்று ஒரு கயிற்றால் அந்த மரத்துண்டைக் கட்டி, அதனை ரபேல் மேலே (இங்கே காட்டப்பட்டுள்ளபடி) இழுக்கும்படியாக விட்டேன்.

**நோ**வாவின் பேழை கண்டுபிடிக்கப்பட்டதாக 1883-ல் கான்ஸ்டான்டிநோபிளில் உள்ள பத்திரிக்கை ஒன்றில் வெளிவந்த செய்தி உலகளாவிய அளவில் ஆர்வத்தை உண்டாக்கியது. இப்பத்திரிக்கைச் செய்தியின்படி அரராத் மலை பனிச்சரிவுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட துருக்கிய புலனாய்வுக் குழுவினர் எதிர்பாராமல் பனிப்பாளத்திலிருந்து துருத்திக் கொண்டிருக்கும் மிகப் பிரமாண்டமான கருமையான மரத்தாலான ஒரு கட்டமைப்பைப் கண்டனர். அப்பகுதியில் வசிக்கும் மக்களும் அவ்வப்போது அதைக் கண்டதாக சாட்சி கூறினார்கள். ஆனாலும் மிகக் கொடூரமான நோக்கமுடைய பிசாசு உள்ளிருந்து தோன்றுவதாக எண்ணியதால் ஒருவரும் அதை அணுகியதில்லை. இவ்விதமான தகவல்கள் புலனாய் வாளர்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மிகுந்த சிரமத் திற்கு பின்பு இறுதியாக எளிதில் அடைய முடியாத பாறை இடுக்கில் தங்கியிருக்கும் அக்கட்டமைப்பை அடைவதில் வெற்றி பெற்றனர். ஐபிராத்து நதியின் சமவெளியில் மட்டுமே வளரும் பழைய கொப்பேர் மரத்தாலான பேழையின் கட்டுமானத்தில் சில இடங்களில் நெரிவுகள் காணப்பட்டபோதும் பேழை நல்ல நிலமையில் இருப்பதாக அடிக்கடி செய்திகள் வெளியாகின்றன. இக்குழுவினர் 15 அடி உயரமுள்ள 3 உள் அறைகளுக்குள் செல்ல வழியுண்டாக்கினர். மீந்தவற்றுக்குள் வழி உண்டாக்க முடியாதபடி பனிக்கட்டிகளால் நிறைந்துள்ளது. பனிக்கட்டிப் பாளத்துக்குள் பேழை எவ்வளவு நீளத்துக்கு புதையுண்டு கிடக்கிறதென்பதை நிர்ணயிக்க முடியவில்லை.

சில ஆண்டுகளுக்குப் பின்பு (1894) வைதீக, கிரேக்க சபையில் பாபிலோனுக்கும், எருசலேமுக்குமான கல்தேய மேற்றிராணியார் (arch deacon) ஜாண்ஜோசப் நௌரி என்பவர் ஐபிராத்துக்கும், அரராத் மலைக்கும் மலை ஏறி சுற்றுப் பயணம் மேற்கொண்டார். ஒன்று 16000 அடி உயரமும், மற்றொன்று 18000 அடி உயரமுங்கொண்ட இரு மலைச் சிகரங்களில் ஏறினார். தனது பணியாட்களுடன் கிட்டத்தட்ட மலையுச்சியி லுள்ள குறுகிய பீடபூமியைக் காணும் அளவிற்கு ஏறியதாகவும் அங்கு அவர்கள் கண்டது நோவாவின் பேழையாயிருக்கு மெனவும் கூறினார். நீண்டு கொண்டு இருந்த அதன் நுனி விழுந்து சிதைந்துவிட்டதாகவும், மரத்தின் நிறம் கெட்டியான கருஞ் சிவப்பும், கிட்டத்தட்ட இரும்பின் நிறமுடையதாகவும் மிகவும் கெட்டியானதாக இருப்பதாகவும் அறிவித்தார்.

மிகச் சமீப காலத்தில் நோவாவின் பேழை மற்றவர் களாலுங்கூட பார்க்கப்பட்டுள்ளதாகப் பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன. அவைகளில் மிகவும் அண்மையில் எங்களது கவனத்திற்கு வந்த பத்திரிக்கை வெளியீடு, பிரான்சு தேச வணிகரும், பொழுது போக்காகப் புதியவைகளைக் கண்டுபிடிப் பதில் ஆர்வமுள்ளவரான ஃபெர்னாண்ட் நாவாரா என்பவரைப் பற்றியது ஆகும். அவர் பேழையில் மீந்திருக்கும் பகுதிகள் 200 ஆண்டுகளில் பல சந்தர்ப்பங்களில் அரராத் மலைப் பகுதி களைக் கண்டறிபவர்களுக்குக் காணப்பட்டது பற்றியும், உலக யுத்தத்தின்போது ஆகாய விமானத்தில் பறந்து சென்றவரான ரஷியர் ஒருவிசை அதைப் பார்த்ததாக உரிமை கொண்டாடி யதையும் வாசித்தறிந்த பின்னர் தாமே பேழையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற எழுச்சியும் தூண்டுதலும் பெற்றார். "நான் நோவாவின் பேழையைக் கண்டு பிடித்தேன்" என்ற அவரது

**COURTESY BY :**

THE BIBLESTANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

புத்தகத்தைத் தழுவி அமெரிக்க வார இதழ் 1958-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி பிரசுரித்ததை, அதன் அனுமதியுடன் சுருக்கமாக இங்கே மறுபதிப்பு செய்கிறோம். அதில் நாவாரா கூறியிருப்பதாவது:

1952-ல் நான் முதல் முதலில் பேழையில் மீதியாயிருந் தவைகளை மட்டும் கண்டேன். நான்கு மலையேறும் நண்பர் களுடன் வேதாகமத்திலுள்ளபடி துருக்கி நாட்டிலுள்ள அரராத் மலையில் நான் 17000 அடி உயரம் ஏறி, அங்கு நிரந்தரமான உறைபனிப் பிரதேசத்துக்குச் சென்று கீழே உற்று நோக்கி, பிளவுபட்டுள்ள பனிக்கட்டிப் பாளங்களுள்ள படுகையின் பக்கவாட்டையும் ஓங்கி உயர்ந்து நிற்கும் ஒரு பாறைச் சிகரத்தையும் கண்டேன். என் இருதயம் கட்டுக்கடங்காமல் படபடவென்று அடித்தது. பேழையின் மீதியாயிருந்தவை அங்கே இருந்தன.

கருமையாகியுள்ள அதன் உத்திரங்கள், ஒளிபுகாதபடி பனிக்கட்டியால் மூடப்பட்டு, பேழையின் பக்கவாட்டு விளிம்பு 375 அடி நீளத்திற்கு தெளிவற்ற தோற்றத்தில் புதையுண்டு கிடக்கிறது. சடுதியாகவும், நாடகக் காட்சிபோலவும் பேழை அங்கிருப்பதைப் பற்றிய கதைகள் என் மனதிற்கு வந்தன. அவை மிகைப்படுத்திக் கூறிய யாத்ரீகர்களின் கட்டுக்கதைகளல்ல, மெய்யாகவே உறுதியான உண்மைகளாகும்.

அத்தருணத்தில் ஏமாற்றமே என் பங்காயிற்று. படுகைக்கு கீழிறங்குவதற்குத் தேவையான உபகரணங்களை நான் என்னுடன் எடுத்து வரவில்லை. ஆகவே வெறுங்கை யனாகவே நான் பிரான்ஸ் திரும்ப வேண்டியதாயிற்று.

அடுத்த ஆண்டு சிறப்பான ஆயத்தத்துடன் ஒரேயொரு தோழனுடன் திரும்பினேன். ஆனால் அந்த பண்டைய மரக் கலத்திற்கு 100 கெஜத்துக்குள்ளாக (yards) நாங்கள் இருக்கும் போது நாங்கள் இருவருமே விசித்திரமான ஒரு நோயால் பாதிக்கப்பட்டோம். அது மண்டையை பிளப்பதுபோன்ற தலைவலிகளைக் கொடுத்தது. நாங்கள் தட்டுத் தடுமாறி மீண்டும் முகாமுக்கு வந்து மலையிலிருந்து கீழே இறங்குவதற்கு முன் அங்கே 3 மணி நேரம் மயங்கிக் கிடந்தோம்.

அரராத் மலை மீது 3-ம் விசை ஏறும் போது மலையை அணுகிக் கண்டுபிடிப்பை நடத்தியாக வேண்டும் என்ற தீவிரமான தீர்மானம் என்னுள் கொழுந்து விட்டெரிந்தது. இருந்தாலும் இவ்விசை இது ஓர் குடும்ப விவகாரம். சிறிதளவு மலையேறத் தெரிந்த உறுதியான தேகக்கட்டுள்ள 11 வயதான எனது மகன் ரபேல் என்னுடனிருந்தான். மேற்புறமாக நாங்கள் கிரமமாக மலையேறினோம் ..... 11000 அடிக்கும் மேல் சென்றதும் மேலும் ஏறுவதை நாங்கள் நிறுத்திக் கொண்டபோது இரவு 10 மணி.

பகல் 4 மணிக்கு மீண்டும் நாங்கள் ஒழுங்கற்று உடைந்த ஓர் பாறையின் குறுக்கே பிரயாணப்பட்டோம். பனிப்பாறை சரிவு ஏற்படாதவண்ணம் நாங்கள் மெதுவாக அடி எடுத்து வைத்து நடந்தோம். 8 மணிக்குப் பாதை ஆபத்தானது. உருகிய பெரும்பாறையின் பெரும் பாளங்கள் எங்கள் பாதங் களின்கீழ் சிதறியோடின. சரிசமமான நிலையில் என்னோடு ரபேல் இருப்பதற்கு போதாத காலம். நான் 60 அடி மேலே ஏறி அவனிடம் கீழே விடும் கயிற்று ஏணியில் கைகால்களால் தொத்திக் கொண்டு அவன் மேலே ஏறுவான். 3 மணிக்கு நாங்கள் 13700 அடி உயரத்தில் உறைபனி எல்லையை அடைந்தோம்.

மறுநாள் காலை 7:30 மணிக்கு மலையேறும் இரும்புகளை ஒன்றொடொன்று கட்டியதைப் பயன்படுத்தி பனிக்கட்டியைச் சமாளித்தோம்..... ஒருவிசை ரபேல் ஒரு பெரும் பனிப்பாறை பிளவைத் தலையால் முட்டி விழ கயிற்றின் நுனியை விறைப்பாக பிடித்திழுத்தேன். பின்னர் ஆலங் கட்டியுடன் சூறாவளி வந்தது. ஓர் உறைப்பனிச் சுவற்றுக்குப் பின்னால் பாதுகாப்புக்காக ஒதுங்கினோம். இறுதியான 100 அடி செல்வதற்கு இரண்டு மணி நேரம் பிடித்தது. நாங்கள் மத்தியான வேளையில் உச்சியை அடைந்தோம். உற்றுப்பார்க்க அதின் விளிம்பை நான் நெருங்கினேன். பின்னர் உறைபனி உடைந்து விடும் என்ற அச்சத்தால் நின்று கொண்டேன்.

''என்னைக் கயிற்றினால் பிடியுங்கள் நான் உற்றுப் பார்த்து, அடியில் என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன்,'' என்று ரபேல் சொன்னான். அவன் தவழ்ந்து சென்று சாய்ந்து கொண்டான். அவன் மிகச் சாதாரணமாக ''இப்பொழுது அதை அங்கே நான் காண்கிறேன்... அப்பா, அந்தப் படகு அங்கே இருக்கிறது. நான் அதை மிக நன்றாகப் பார்க்கிறேன்'' என்றான்.

என் இருதயம் நொறுங்குண்டது. கீழே இறங்குவதற்கு எதாவது வழியிருக்கிறதா எனச் சுற்றும்முற்றும் பார்த்தோம். சிறிது நேரத்தில் ரபேல் என்னைக் கூப்பிட்டு ''இங்கே ஒரு ஆழமான பனிப்பாறைப் பிளவு இருக்கிறது. அதனடியில் நான் வெளிச்சம் காணமுடிகிறது'' என்றான். நான் ஏணியை விரித்துக் கீழே இறங்கினேன். சில நிமிடங்கள் கழித்து நான் பனிப்பாறைப் பிளவின் அடிமட்டத்திலிருந்தேன்.

ரபேல் பார்த்த அவ்வெளிச்சம் சுமாராகச் சரிந்துள்ள மச்சுக்குச் செல்லும் தாழ்வாரத்திலிருந்து வந்தது. அம்மச்சியில் பனிக்கட்டியில் நீண்டு குறுகிய கருப்பான மரக்கட்டைகளை நான் அடையாளங்காண முடிந்தது, அது பேழையின் உத்திரங் களாகத்தான் இருக்க வேண்டும்!

மகிழ்ச்சியால் சிரித்துக் கொண்டிருந்த ரபேலுடன் நான் மீண்டும் சேர்ந்து கொண்டேன்...... நான் மீண்டும் பனிப்பாறைப் பிளவுக்குச் சென்று பனிக்கட்டியிலிருந்து உறைபனியை நீக்கினேன். என் இருதயம் தளர்வுற்றது. அது மரமல்ல, பனிக்கட்டியில் படியும் தூசிதான் தூரத்திலிருந்து இம்மாயத் தோற்றத்தைக் காட்டிக் கொண்டிருந்தது.

இப்பொய்த் தோற்றத்திற்காகவா இத்தனை பிரயாசங்களும்?

''அப்பா, மரத்துண்டை வெட்டிவிட்டீர்களா?'' என்று ரபேல் கேட்டான்.

''அது மரமல்ல, வெறும் தூசிதான்'' என்று நான் கசப்புடன் சொன்னேன்.

''நீங்கள் அதைத் தோண்டினீர்களா?'' என்று அவன் கேட்டான்.

தோண்டுவதா? என்னுடையக் குழப்பத்தில் நான் அதைக் கனவிலும் நினைக்கவில்லையே! நான் மேலே காணப்பட்ட பொருக்கை, பனிக்கட்டி வெட்டுங் கோடாரியால் வெட்டினேன். நான் 1 $^1/_2$ அடி அகலமும் 7 அங்குல ஆழமான ஒரு குழி தோண்டியபோது உடைபட்ட பனிக்கட்டியின் அடியில் தண்ணீர் தோன்றியது. அந்தத் தண்ணீரில் உத்திரத்தின் நுனி காணப்பட்டது!

நான் என் நகங்களை அதில் அமிழ்த்தினேன். அது பனிக்கட்டியில் படியும் தூசி அல்ல, அது ஒரு மரத்துண்டு என்பது முற்றிலுஞ்சரி. இது மனிதனால் வெட்டப்பட்டிருந்த ஒன்று. கண்ணீரை அடக்கிக்கொண்டு, ''நான் மரத்தைக் கண்டுபிடித்து விட்டேன்'' என்று ரபேலுக்குத் தெரிவித்தேன்.

இம் முழு உத்திரத்தையோ அல்லது இதுபோன்று பிறவற்றையோ நான் வெட்டி எடுக்க முடியாதென்பது

பிரத்தியட்சமானது. $1\frac{1}{2}$ கெஜ நீளமுள்ள ஓர் மரத்துண்டை நான் வெட்டி எடுத்தேன். அதன் எடை என்னைப் பிரமிக்கச் செய்தது. அது பணித்தீர்க்கப்பட்டது. இது நிச்சயமானது. நான் ஏணிக்குத் திரும்பச் சென்று ஒரு கயிற்றால் அந்த மரத்துண்டைக் கட்டி, அதனை ரபேல் மேலே இழுக்கும்படியாக விட்டேன்.......

நான் கண்டுபிடித்தது பேழைதானா? நான் கண்டு பிடித்த மரம் பாரீஸ் பொருட்காட்சியில் 3 ஆண்டுகள் இருந்தபொழுது கருத்து வேறுபாடுகளும் சர்ச்சைகளும் சினந்தெழும்பின. ஆனால் நிபுணர்களோ 5000 வருடங்களோ அல்லது அதற்கு மேலான வருடங்களாகவோ இம்மரம் அம்மலையின் எரிமலைக் குழம்பின் தூசியால் பாதுகாக்கப் பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். ஓர் மரக் கப்பலின் பக்கவாட்டு விளிம்பு போன்ற வடிவில் வேறு எந்தக் கட்டமைப்பு அரராத் மலையுச்சியில் கட்டப்பட்டிருக்கும்........? பனிக் கட்டியின் கீழ் மீந்திருப்பது எதுவோ அது பேழையின் மீதிதான் என நான் நம்புகிறேன்.

## மேற்கூறியவைகளைப் பற்றிய விமர்சனங்கள்

இவ்விதமான விஷயங்களை நாம் எப்படி மதிக்க வேண்டும்? அவை மெய்யா, பொய்யா? காலம் கூறும். எனினும் நோவாவின் பேழை கெடாமல் பாதுகாக்கப்படும் பொருட்டு தேவன் செய்திருப்பதை ஏதோ புதுமையென்று நாம் நினைக்க வேண்டியதில்லை. எரிமலைக் குழம்பின் தூசியும் நிரந்தரமான உறைபனியும், பனிக்கட்டியும் (அரராத் மலையின் உச்சிக்குக் கீழ் வரை 3000 அடிக்குமேல் பரந்து கிடக்கின்றன) வெகு காலம் உழைக்கக் கூடியதும் பேழை செய்யப்பட்டதுமான மரம் கெடாமல் பாதுகாப்பதற்குத் தலைசிறந்த பொருட்களாயிருக்கும்.

தோமா அப்போஸ்தலர் போன்ற சில தனி நபர்கள் தாம் நம்புவதற்கு முன் கண்ணால் பார்க்கக் கூடியதையும், தொட்டுணரக் கூடியதையும் ஆதாரமாகக் கொண்டுள்ளனர். ''**உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிக ளெல்லாருடைய வாக்கினாலும் முன்னுரைத்த இழந்து போனவைகளைத் திரும்பக் கொடுக்கும் காலங்களுக்குள்**'' (அப். 3 : 21) நாம் முன்னேறும் இவ்வேளையில், தேவனே செய்யாவிட்டாலும், விசுவாசித்து நடக்காமல் தரிசித்து நடப்பவர்களுக்கு விசேஷித்த உதவியாக இருக்கும் பொருட்டு பலகாரியங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட அவர் அனுமதித்துக் கொண்டிருக்கிறார். பல புராதான கையெழுத்துப் பிரதிகள், விலை மதிப்புள்ளதும், நம்பவைப்பதுமான தொல் பொருட்கள், மணிணியற் கண்டுபிடிப்புகள், விஞ்ஞான வளர்ச்சிகள், அதிசயமான கண்டுபிடிப்புகள் போன்றவை பண்டைய வேதாகமத் தீர்க்கதரிசனங்கள் முதலானவற்றின் நிறைவேறுதல்களை வெளிப்படுத்துகின்றன.

ஞானமுள்ள தேவன் மனுக்குலம் மீது கொண்ட இரக்கத்தால் ''எகிப்து தேசத்தின் நடுவிலே அதனைக் கட்டும்படியாகவும் (அப்பொழுதே) அதன் எல்லையருகே ஒரு ஸ்தம்பமாகவும்.'' ''சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும், சாட்சியுமாகவும்,'' (ஏசா. 19 : 19, 20) திட்டமிட்டு பெரிய கூர் நுனிக் கோபுரத்தைக் (The great Pyramid) கட்டும்படிச் செய்தார். (இது சம்பந்தமான விளக்கத்திற்கு தயவு செய்து S. Vol. 3; பக். 48-ஐப் பார்க்கவும். அது இப்போது (அக்காலத்தில்) விஞ்ஞான மனிதர்களிடம் பேச ஆரம்பித்திருக்கிறது. முழுச் சந்தேகவாதிகளுக்குங்கூட, ''**அக்காலத்தில்**'' மற்றுமோர் சாட்சி யாக ஆயத்தமாயிருக்க நோவாவின் பேழையை எரிமலைக் குழம்புத் தூசி, உறைபனி, பனிக்கட்டி ஆகியவற்றால் புதைக்கப்பட்டும் அழிந்து போகா வண்ணம் பாதுகாப்பு செய்யப்பட்டிருப்பதுடன், கூடுதலாகத் தொலைவில் மறைத்து வைத்திருக்கலாம். சுபாவ மனிதரும், ஏன் முழுச் சந்தேகவாதி களும்கூட இந்த ''**முடிவு காலத்தில்**'' (தானி. 12 : 4) ''**ஆயத்த நாளிலும்**'' (நாகூ. 2 : 3, 4) போதிக்கப்படவும், ஆயத்தப்படுத்தப் படவும், வேத சத்தியத்தின் வெளிப்படையான ஆதாரங்கள் பெருக ஆரம்பித்திருக்கின்றன. அது , ''சரியாகத் தேவனைப் போன்றும்'' மற்றும் வேத வாக்கியங்களின் சாட்சியோடு பூரண இசைவிணக்கமாயிருக்கிறது என்று மட்டும் நாம் சொல்லக் கூடும். காலம் செல்லச் செல்ல இந்த ஆதாரங்களும், வளர்ச்சி களும் வளர்ந்து பெருகும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

## சந்தேகவாதிகளின் மறுப்புக்கு விடை

பேழையின் அளவுகள் பற்றிய வேத ஆதாரத்தைச் சில சந்தேகவாதிகள் கேலி செய்துள்ளனர். (ஆதி. 6 : 15) (உதாரணம்) ஒவ்வொரு வகைக்கும் இரண்டு என்று அத்தனை ஜீவ ராசிகளையும் கொள்ள அது அத்தனை பெரியதாயிருந்ததா? என்றும், மற்றவர்கள் பிரளய காலம் மட்டும் பூமியின்மேல் மழைபெய்யவில்லை என வேதத்தில் கூறப்பட்டுள்ளதைப் பற்றியும் வினவியுள்ளனர். மூடு பனியுண்டாக்கியதால் தாவரங் கள் நிலைத்திருந்தன. (ஆதி. 2 : 6) இப்பிந்திய மறுப்புக்கு (S. Vol. 6) புது சிருஷ்டிப்பு அத். 1-லும், E. Vol 2-லும் விரிவான பதிலளிக்கப்பட்டுள்ளது. அதில், தண்ணீர் அப்பிரளய காலம் வரை பூமியை மூடியிருந்த கனமான ஓர் மென்படலம் அல்லது உறையாக பூமியைச் சுற்றி சிருஷ்டிக்கப்பட்டிருந்தது என்றும் தேவ ஏற்பாட்டால் உடைந்து ஒரு பகுதி கனத்த மழையாகவும், ஒரு பகுதி இரு துருவங்களிலிருந்து வரும் பெரு வெள்ளமாகவும் பூமியின் மீது இறங்கியது என்றும் காட்டப்பட்டுள்ளது.

பேழையின் அளவுகள் பற்றிய மறுப்புகளுக்கு நமது விளக்கம்: இது 3 மாடிகளுடன், கொப்பேர் மரத்தால் கட்டப்பட்டு, அப்பிராந் தியத்திலும், சவக்கடலைச் சுற்றிலும் இருந்திருந்த நிலக்கீலால் (அஸ்பால்ட்) தண்ணீர் உள்ளே வர முடியாதபடி பூசப்பட்டது. மேற்கூரைக்கருகில் பாதுகாப்புக்காகவும் நான்கு பக்கங்களிலும் வெளிச்சத்துக்காகவும், காற்றோட்டத்துக்காகவும் விடப்பட்டிருந்த இடைவெளியை, கூரையைத் தாங்கி நின்ற உத்திரங்கள் அல்லது தூண்கள் இடைமறித்தன. அறைகள், சொல்லர்த்தமாகக் கூடுகள் அல்லது சிற்றறைகள் மூன்று அடுக்குகளில் பிராணி களுக்கு இடவசதி செய்யப்பட்டிருந்தது, (ஆதி. 6 : 14-16). இந்த அறைகளின் தடுப்புகள் பேழையின் முழு அமைப்பையும் பலப்படுத்தியது. அதற்கு ஒரே ஒரு வாசல்தான் இருந்தது.

பேழையின் எடை 11000 டன் என மதிப்பிடப் பட்டிருக்கிறது. வெவ்வெறான எல்லா வகைப் பிராணிகளின் ஜோடிகளுக்கும் ஏராளமான இடமிருந்தது. அது 1000 பேர் தங்கக் கூடிய அளவாகவும், மேலும் ஆகாரப் பொருட்கள் சேமித்து வைப்பதற்கும் ஏராளமான இடமிருந்தது. ஒரு முழம் 18 அங்குலம் எனக் கொண்டால் பேழையின் அளவுகள் 450 அடி நீளம், 75 அடி அகலம், 45 அடி உயரம் இதன் முகப்பு, பின்புறம், பக்கங்கள் ஆகியவற்றின் சாய்வுக்கு 50 அடி கழித்தால் நமக்குக் கிடைப்பது 400 அடிக்கு 75 அடி அதாவது ஒவ்வொரு தளமும் 30,000 சதுர அடி வீதம் 3 தளங்களும் 90,000 சதுர அடி இடம் கொண்டதாகும். நியூயார்க்கிலிருந்து மாடுகளைக் கொண்டு செல்லும் நீராவிக் கப்பல்கள் ஒரு எருதுக்கு 20 சதுர அடி ஒதுக்குகிறது. இதன்படி ஒவ்வொரு தளத்திலும் 1500 எருதுகள் வீதம் 4500 எருதுகளுக்கு இடவசதியுடன் ஒவ்வோர் தளமும் 13 அடிக்கு அப்பால் இருப்பதால், காற்றோட்டத்திற்கும் போதிய இடவசதியுண்டு:

கெயிக்கி (Geike) என்பவர் குட்டி போட்டு பால் கொடுக்கும் பிராணிகளின் வகைகளை 1660-க்கும் 1700-க்கும் இடையில் இருக்கும் என நிர்ணயிக்கிறார். அப்படியானால் இவை ஒவ்வொன்றும் இரண்டு எருதுகளின் பருமன் உடைய தாயிருந்தால் பேழை இவற்றை இரு தளங்களிலும், மூன்றாம் தளத்தின் ஒரு பகுதியிலும் எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஆனால் இவ்வகை பற்றிய வாலஸ் என்பவரின் கவனமான வகைப்படுத்தலின் படி அவற்றின் சராசரி பருமன் ஒரு சாம்பல் நிற நரியின் பருமனுக்குச் சமமானதாகும். சாம்பல் நிற நரியின் பருமனை எல்லா இன வகைகளுக்கும் ஓர் திட்ட அளவாகக் கொண்டு, அதற்கு ஒரு எருதின் 1/4 பகுதி பருமன் எனக் கொண்டாலும் அவற்றுக்கு ஒரு தளத்தின் பரப்பான 30000 சதுர அடி தேவையற்றதே. வாலஸ் பறவைகளை 10087 ஆகவும், ஊர்வனவற்றை 975 ஆகவும், பல்லிகளை 1252 ஆகவும் மதிப்பிடுகிறார். இவற்றின் சராசரி பருமனையும், ஏழு ஏழாக எடுக்கப்பட்ட சுத்தமான பிராணிகளின் (ஆதி. 7 : 2, 3) எண்ணிக் கையையும் சேர்த்தாலும் போதிய இடவசதியுடன் காணப்படும்.

பேழையின் அளவுகள் கொண்ட ஓர் மரக்கப்பல் கடல் பயணம் செய்யப் பொருத்தமானதா எனச் சிலர் ஆச்சரிய மடைந்துள்ளனர். பேழையின் அளவுகளுடன் கட்டப்பட்ட ஒரு மரக்கப்பல் கடல் பயணம் மேற்கொள்ளப் பொருத்தமானது தானா என்பதைச் சோதித்தறிய சில ஆண்டுகளுக்கு முன் டென்மார்க்கிற்கும், சுவீடனுக்கும் இடையேயான சவுண்ட் என்ற இடத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற செய்தி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 300 x 50 x 30 முழு அளவுகள் கொண்ட பேழையின் மாதிரி ஒன்று 30 அடி நீளம், 5 அடி அகலம், 3 அடி உயரத்துடன் கட்டப்பட்டது. இம்மாதிரி அமைப் பின் குறுக்கு வெட்டுப்பரப்பு ஓர் இரு சமபக்க முக்கோணத்தைப் பிரதிபலிக்கும்படியும் சேணம் போன்ற கூரையுடன் பழங்காலப் பாணியில் கட்டப்பட்டது.

பருவ கால நிலையைத் தானே சுயமாகக் கணித்து அதைச் சந்திக்க சுயேச்சையாக விடப்பட்டபோது அது கடற்பிரயாணம் செய்யத்தக்க சிறந்த இயல்புகளை வெளிப்படுத் தியது. அது காற்றுபடாத பக்கத்தில் அமர்ந்த தண்ணீர் வெளியை உருவாக்கிக் கொண்டு அலைகளோடு பக்கவாட்டில் மிதந்து சென்றது. நீண்ட கடற்பயணத்துக்கு இப்பழைய கால மரக்கலம் உகந்தது என்ற இறுதியான முடிவை இப்பரிசோதனை நிரூபித்தது. சரக்குக் கப்பல் கட்டுவோர் இப்பேழையின் பொதுவான விகிதாச்சாரத்தைக் கவனமாகப் பின்பற்றியுள்ளதாக கூறப்படுகிறது. பொனிசியரும், கிரேக்கரும், ரோமரும், இதரக் கப்பல் கட்டுவோரும் இடவசதி மிக்கதும், பாதுகாப்பானதும், சிக்கனமுமான இப்பேழையின் தலைசிறந்த வடிவமைப்பிற்கு அதாவது இவ்விகிதாச்சாரத்திற்கு மாறாகக் கட்டிய சரக்குக் கப்பல்கள் எதிர்பார்த்ததிற்கும் குறைவானது என ஒப்புக் கொள்கின்றனர். தேவ ஞானத்தில் கொடுக்கப்பட்டுள்ள இவ்விகிதாச்சாரங்கள் சந்தேகமின்றி தலைசிறந்தவை. ***

# மாபெரும் ஜலப்பிரளயம்

## *The Great Deluge*

**மா**பெரும் ஜலப்பிரளயம் ஒன்று ஏற்பட்டது என்ற உண்மைக்கு, மிகப் பண்டைய கால வரலாறுகள் சான்று பகர்கின்றன. வேதாகமக் குறிப்புகளை மிகப் பழமையா னவற்றில் ஒன்றாக நாம் கருதலாம். ஏனெனில், இந்த வரலாறுகளுக்கு, நினிவேயின் அழிவில் கண்டெடுக்கப்பட்ட, சுடப்பட்ட களிமண் எழுத்துப் பலகைகளைக் குறித்து விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்ட காலங்களின்மேல் நம்பிக்கை வைக்க முடியாது. வேதாகமத்தைவிட பழமையான ஒன்றைக் கண்டுபிடித்து அதிலிருந்துதான் வேதாகமத்திலுள்ள விவரங்கள் தயார் செய்யப்பட்டது என்று அவர்கள் வலியுறுத்துவதற்காக முயற்சி செய்தார்கள். அதனால் ஜலப்பிரளயத்தைப் பற்றிய அந்தப் பழைய கால மண்பலகைகளுக்கு ஆயிரக்கணக்கான வருடங்களைக் கூட்டினாலும் அவர்களுடைய யூகங்கள் நாம் உறுதியாக நம்புகிற வேதாகம அறிக்கையை எவ்விதத்திலும் பயனற்றதாக்கவில்லை. நோவாவிலிருந்து, ஆபிரகாம் மற்றும் மோசே வரையிலான வம்ச வரலாறு தெளிவாக, சுற்றிவளைக் காமல் நேரடியாக சொல்லப்பட்டுள்ளது. இந்த விவரம் பாபிலோனிய பதிவுகளில்கூட இல்லை.

“**இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது**” என்று அப்போஸ்தலர் நமக்கு முன் எச்சரிப்பு செய்கிறார். (1 கொரி. 3 : 19). தேவனுடைய ஞானம், திட்டம் மற்றும் வெளிப்படுத்தல்கூட இந்த “**ஞானிகளுக்கு**” பைத்தியமாக இருக்கிறது. (1 கொரி. 2 : 14; 1 : 19-21). யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையைத் தவறென்று நிரூபிக்கும் அவர்களுடைய முயற்சியில் எல்லா தேவ வெளிப்படுத்தலையும் புறக்கணிக்கும் அவர்களுடைய பெரும் முயற்சியில், முடியுமானால், சொந்த சிருஷ்டிகரையும் புறக்கணிக்க, அவர்கள் ஆதியாகமம் புஸ்தகத்தின்மீது தாக்குதல் தொடுக்கின்றனர். இரண்டு வித்தியாசமான கணக்கை ஒன்றுக் கொன்று பின்னியிருப்பதை வேறுபடுத்திக் கண்டறியாமல் மாறுபாடு உண்டாக்கியதை உண்மையானதென்று வைத்துக் கொண்டால், வேதாகமத்தின் நன்மதிப்புக்கு குறைவு ஏற்பட்டு இந்த உலகம் தேவனால் அருளப்பட்ட கணக்கை மறுக்க வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகி, இந்த “ஞானிகளின்” யூகங் களை (அனுமானத்தை) விஞ்ஞானப்பூர்வ உண்மையாக ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த விஷயம் சம்பந்தமாக (Pelubet) புளோபெட் என்பவர் கூறுகிறதென்னவெனில் “மறுப்புகள் அல்லது விமர்சனங்கள் இரண்டு விவரங்களை பார்ப்பது மட்டுமல்லாது அவை ஒவ்வொன்றும் முழுமையானது என்று ஏற்றுக் கொள்ளு கிறவர்களிடமிருந்தே வருகிறது. அநேக விமர்சகர்கள் வேதாகம செய்திகளுக்கு ஆதாரமாக கருதும் பிரளயத்தைப் பற்றிய பாரம்பரியங்கள் ஒருங்கிணைந்த விவரங்களை உள்ளடக்கி யிருக்கிறது. ஜலப்பிரளயத்தைப் பற்றிய உலகளாவிய பாரம் பரியங்களில் பெரிய அளவில் ஒற்றுமையான விளக்கங்கள் காணப்படுகின்றன. மிக முக்கியமானது நினிவேயின் அழிவு களில் கண்டெடுக்கப்பட்ட களிமண் பலகைகளில் எழுதப்பட்ட கல்தேயரின் அறிக்கை தற்போது பிரிட்டிஷ் அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. புவியியலில் இந்த ஜலப்பிரளய நிகழ்ச்சியை நம்ப மறுப்பதற்கு ஒன்றுமே சொல்லப்படவில்லை. ஆனால் அதிக அளவில் அந்த உண்மையை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் உள்ளன.”

இன்னொரு எழுத்தாளராகிய லீ நார்மண்ட் என்பவர் சொல்கிறதாவது:- ''ஜலப்பிரளயம் என்னும் நிகழ்ச்சியானது மனித இனத்தின் எல்லா பிரிவுகளிலும் உள்ள உலகளாவிய பாரம்பரியமாகும், இதில் ஒரே ஒரு விதிவிலக்கு கறுப்பர் இனம் மட்டுமாகும். எல்லா இடங்களிலும் மிகச் சரியாக மிகவும் ஒத்துமிருக்கும் இந்த பாரம்பரியமானது ஒரு கற்பனையான கட்டுக்கதை என்று நிச்சயம் குறிப்பிடவே முடியாது........இது உண்மையாகவே நடந்த ஒரு பயங்கரமான நிகழ்ச்சியின் முன் நினைவாகத்தான் இருக்க முடியும் ........ மனித இனத்தின் ஆரம்பக் காலக்கட்டத்தில், அதாவது , மனித சமுதாயம் பிரிந்து அதிலிருந்து முக்கியமான ஜாதிகள் உண்டாவதற்கு முன்பும் இது ஏற்பட்டிருக்க வேண்டும்.'' வேதாகமத்தோடு ஒப்பிடும்போது பாபிலோனியப் பதிவேடுகளில் ஜலப்பிரளயத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளவை மிக சொற்பமே என்று புரொபசர் ஜி.எஃப். ரைட் (G.F. Wright) சொல்கிறார். ''அசீரியர்களின் எழுத்துமுறை வரைபலகைகள் ஒரே கணக்கில் இணைவதை (ஜலப்பிரளயத் தைப் பற்றிய அவர்களுடைய கணக்கு கிறிஸ்துவுக்கு 1800 முதல் 2000 வருடங்கள் முந்திய பாபிலோனிய ஆவணங் களிலிருந்து பிரதி எடுக்கப்பட்டது) கவனிப்பது ஏற்றது. பெரும்பாலும், ஆதியாகமத்தைப் போன்ற அதே வரிசைக் கிரமத்தில் உள்ளன. ''எலோஹிய'' மற்றும் ''யேகோவாகிய'' ஆவணங்கள் இரண்டுமே அநேக விமர்சகர் கள் கருதுவதுபோல் பாபிலோனிய சிறையிருப்புக்கு பின்பு ஒன்றாக இணைக்கப் பட்டிருக்கலாம். ஆகவே இந்த ஒப்புமையில் இந்த விமர்சகர்கள் எழுத்தின்படியான ஆய்வில் தங்கள் யூகங்களில் தவறியிருக் கிறார்கள் என்பதற்கு நமக்கு ஏராளமான விஞ்ஞான விளக்கங்கள் இருக்கின்றன. ஆதியாகமத்தில் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகாத இரண்டு காலக் கணக்குகள் இருக்கின்றன என்று விளக்குவதற்கு அவர்கள் எடுத்த முயற்சி ஆதாரமில்லாமல் போயின. அவை மனம்போல யூகிப்பதைவிட கொஞ்சம் அதிகமானதே. ஏனெனில் அவைகளைத் தடையின்றி ஒரே தொடர்பான காலக்கணக்கில் திட்டமாக ஒழுங்குப்படுத்த முடியும்.

## ஜலப்பிரளயத்தின் காலப்பகுதி

ஆதியாகமம் 7 மற்றும் 8 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்ட ஜலப்பிரளயத்தின் மிகச் சரியான காலம் காட்டுவதென்னவெனில், நோவா, அவருடைய மனைவி மற்றும் அவருடைய மகன்கள், அவர்களின் மனைவிகள் மற்றும் மிருகங்கள், பறவைகள் முதலியவைகள் பேழையில் நுழைந்து, மழை பெய்ய ஆரம்பித்த நேரத்திலிருந்து, பூமி முற்றிலுமாக உலர்ந்து போனது வரையுள்ள காலப்பகுதி 365 நாட்கள் கொண்ட ஒரு முழு வருடம் என்பதாகும். ஜலப்பிரளயம் பூமியின் மேல் உண்டானபோது நோவா 600 வயதாயிருந்தார் என்று நாம் வாசிக்கிறோம் (ஆதி. 7 : 6). மேலும் ''நோவாவுக்கு 601 வயதாகும் வருஷத்தில், முதல் மாதம் முதல் தேதியிலே பூமியின்மேல் இருந்த ஜலம் வற்றிப்போயிற்று'' (ஆதி. 8 : 13) என்று அறிகிறோம். நாற்பது நாட்கள் இரவும், பகலும் பூமியின் மேல் மழை பெய்தது என்று வேதம் குறிப்பிடுகிறது. (ஆதி. 7 : 4, 12). மகா அழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன. (துருவங்களிலிருந்து தான் மிக அதிக அளவு வெள்ளம் பூமிக்குள் வந்தது) ஜலம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வந்து, மழை நின்றபிறகும் ஜலம் பூமியின்மேல் 150 நாட்கள் மிகவும் பிரவாகித்துக்கொண்டிருந்தது. (ஆதி. 7 : 24; 8 : 3). - அது கிட்டத்தட்ட ஐந்து மாத காலமாகும். பின்பு தேவன் பூமியின் மேல் காற்றை வீசப் பண்ணினார். அப்பொழுது ஜலம் அமர்ந்தது; ஆழத்தின் ஊற்றுக் கண்களும், வானத்தின் மதகுகளும் அடைப்பட்டன. வானத்து மழையும் நின்று போயிற்று.

ஜலம் பூமியிலிருந்து நாளுக்கு நாள் வற்றிக்கொண்டே வந்து ஏழாம் மாதம் 17-ம் தேதியிலே பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று (ஆதி. 8 : 4) ஜலம் தொடர்ந்து வடிந்து (குறைந்து) கொண்டேவந்து சுற்றிலுமுள்ள சிறிய மலைச் சிகரங்கள் தெளிவாக காணப்பட்டன (வச. 5) நாற்பதுநாள் சென்றபின்பு, ஜலம் எந்த அளவுக்கு வடிந்துள்ளது என்பதை தீர்மானிப்பதற்காக நோவா முதலில் ஒரு காகத்தையும், பின்பு ஒரு புறாவையும் பேழையிலிருந்து வெளியே விட்டார். காகம் புறப்பட்டுப்போய் பூமியின் மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும் வரைக்கும் போகிறதும், வருகிறதுமாய் இருந்தது, பின்பு புறா பசுமையான ஒலிவ மரத்தின் இலையுடன் திரும்பி வந்தது. ஒருவாரம் கழித்து மீண்டும் வெளியே விடப்பட்ட புறா அவனிடம் திரும்பி வரவில்லை. அதன்மூலம் ஜலம் பூமியின் தாழ்விடங்கள் வரை வற்றிவிட்டது என்று அறிந்துகொண்டார். கர்த்தருடைய கட்டளைப்படி நோவாவும் மற்ற அனைவரும் அவருடைய பராமரிப்பின்கீழ் இரண்டாம் மாதம் இருபத்தேழாம் தேதியிலே பேழையிலிருந்து வெளியே வந்தனர். (ஆதி. 8 : 14). அவர்கள் இரண்டாம் மாதம் 17-ம் தேதியில் பேழையில் பிரவேசித்திருந்த படியால் (ஆதி. 7 : 11) அவர்கள் வெளியே வரும்போது ஒரு வருடமும் பத்து நாட்களும் ஆயிற்று. ஆனால் இந்த வித்தியாச மானது, சந்திர மாதக் கணக்கு முறையால் அளவிடப்பட்டதால் ஏற்பட்டுள்ளது.

## ஜலப்பிரளயத்திற்கு காரணம்

புது சிருஷ்டி மற்றும் சிருஷ்டிப்பு (E.Vol - 2) எனும் புத்தகங்களில் சொல்லப்பட்டுள்ளது என்னவென்றால் சனி கிரகத்தைச் சுற்றி இப்பொழுது நாம் பார்க்கிறதைப்போன்ற வளையங்கள் பூமியைச் சுற்றியும் இருந்தன; அந்த மகா பெரிய வளையங்களில் ஒன்றான கடைசி வளையம் உடைக்கப்பட்டதன் விளைவே ஜலப்பிரளயம் ஆகும் என அந்த இரண்டு புஸ்தகங்களிலும் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இந்த தண்ணீர் உறை உடைக்கப்பட்டதால் ஏற்பட்ட ஜலப்பிரளயமானது தேவ ஞானத்தாலும் முன்னறிவினாலும் மனுக்குலத்தின் காரியங் களில் ஓர் ஆபத்தான நிலையை அந்த நேரத்தில் ஏற்படுத்தும்படி அமைக்கப்பட்டது. ஆதாம் பாவம் செய்யாமலிருக்க முடியாது என்றும் அதனைத் தொடர்ந்து மனுக்குலம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்காமலிருக்க முடியாது என்றும் தேவன் முன்கூட்டியே அறிந்துகொள்ள வில்லையா? சந்தேகமில் லாமல் அவர் பூமியின் மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்பே மழைவெள்ளம் ஏற்படவேண்டும் என்று முன்கூட்டியே முன்னறிந்து ஏற்பாடு செய்திருந்தார். இந்த ஆபத்தை வேதாகமத்தில் குறிப்பாக ''**பூமியானது தேவனுக்கு முன்பாக சீர்கெட்டதாயிருந்தது: பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது**'' (ஆதி. 6 : 11) என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. தேவன் மனுஷனை தமது சாயலாகவும், தமது ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்திருக்கையில் இது எப்படி நேர முடியும்? என்று நாம் கேட்பது இயற்கையானதும், பொருத்தமானதுமே ஆகும்.

வேதத்தின்படி இதற்கான பதில் என்னவெனில், கீழ்ப்படியாமை எனும் பாவத்தில் தொடங்கி அந்த பாவம் ஆதாமின் வம்சமனைத்தையும் பிடித்துக்கொண்டது (ரோம. 5 : 12-19) அவர்களைக் குறித்து துர்க்குணத்தில் உருவாக்கப்பட்டு பாவத்தில் பிறந்தவர்கள் (சங். 51 : 5) என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதை விட மேலாக, மனுக்குலம் கீழ் நோக்கி சென்றதால் ஏற்பட்ட கொடூரமானது மற்றொரு புறம்பான காரணம் மூலம் அதிகப் படுத்தப்பட்டுள்ளது, அதாவது சிருஷ்டிப்பின் அதிகாலையில் ஏகமாய்ப் பாடி கெம்பீரித்த "**தேவ**

**புத்திரர்கள்**'' (யோபு 38 : 7) என்னப்பட்ட தூதர்களிடம் மனுக்குலத்தை மேற்பார்வை செய்யும்பணி கொடுக்கப்பட்டி ருந்தது. ஆனால் பாவம் மற்றும் சீர்கேட்டின் விளைவுகள் தொற்று நோய்போல் பரவக் கூடியது என்று நிரூபிக்கப்பட்டது. அப்போஸ்தலர்களான பேதுருவும், யூதாவும் விவரித்ததுபோல அந்த தூதர்களில் சிலர் தங்களுக்குரிய ஆதி மேன்மையை அதாவது தூதர்களுக்குரிய மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், மனுக்குலத்திற்கு உதவி செய்வதற்கும் அவர்கள் நலன்களுக்காகவும் மட்டும் அளிக்கப்பட்டிருந்த சிறப்பு உரிமையைப் பயன்படுத்தி மனுஷ ரூபமெடுத்து, அந்த சரீரத்தை தவறாக பயன்படுத்தி, தூதர்களாக வாழ்வதைவிட மனிதர்களாக வாழ்வதையே விரும்பினர். ஆதி. 6 : 1-5 வசனங்கள் தெரிவிப் பதுபோல இந்த தூதர்கள் தாங்கள் எடுத்த மனுஷ சரீரங்களோடு மனுஷ குமாரத்திகளுடன் கூடி தவறான உறவு வைத்திருந்தனர். (2 பேது. 2 : 4; யூதா 6).

இந்த ''**தேவ குமாரர்கள்**'' மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். அதன் விளைவாக அவர்களுக்கு ''**பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷரும் பலவான்களுமான**'' இராட்சதர்கள் பிறந்தார்கள். இந்த முறைகேடான பிறப்பு தேவ ஏற்பாட்டுக்கும் ஒழுங்குக்கும் நேர் எதிரானதும், அந்த சமயத்தில் இருந்த ஆதாமின் சந்ததியை விட மிக மேலானதுமாக இருந்தது. ஆதாமின் சந்ததியோ, விழுதலுக்கு அநேக நூற்றாண்டுகளுக்குப் பிறகு குறிப்பிடத்தக்க அளவுக்கு கீழ்த்தரமானதாகி சீர்கெட்டுவிட்டது. இந்த இராட்சதர் களும், பேர்பெற்றவர்களான, இந்த தேவ தூதருக்கும் மனிதர்களுக்கும் பிறந்த தெய்வீக மானிடர்கள் அறிவாற்ற லிலும், சரீரத்திலும் மனிதரைவிட மேலானவர்களாக இருந்தனர். அவர்கள் மனுக்குலத்தை இரக்கமின்றி ஆட்சி செய்து பூமியைக் கொடுமையால் நிரப்பினார்கள். ஆதலால் ஆதாமின் சந்ததி எந்த விதத்திலும், இவர்களுக்கு பொருத்தமானதாக இருக்க வில்லை. தேவ குமாரர்களுடன் கொண்ட தகாத உறவு மூலம் இந்த சந்ததி எந்த அளவுக்கு சீர்கெட்டதாயிருந்தது என்பது ஆதி. 6 : 12-ல் சொல்லப்பட்டுள்ளது. ''**மாம்சமான யாவரும் பூமியின் மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்.**''

மனுக்குலம் முழுவதும் அழிக்கப்படுவதற்கு இதுவே காரணமாக அமைந்ததாக நமக்கு விவரிக்கப்பட்டுள்ளது. நோவாவும் அவர் குடும்பத்தாரும் தவிர அந்த மனுக்குலமானது தேவன் சிருஷ்டித்த சுத்தமான ஆதாமின் இனமாக இருக்க வில்லை. நோவாவும் அவருடைய குடும்பத்தாரும் தவிர மனுக்குலமானது தேவனுடைய ஏற்பாட்டு சம்பந்தமான அவருடைய உபயோகத்துக்கு பொருத்தமற்றதாயும், பிரயோஜனமற்றதாயும் இருந்தது. இந்தக் காரியமாக, நோவாவின் பிரசங்கமானது, அவருடைய நண்பர்கள், அயலகத்தார் மத்தியில் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. அவர்கள் முற்றிலுமாக ''**பலவான்களான**'' நெபிலிம்களின் (nephilim) அதாவது இராட்சதர்களின் ஆதிக்கத்தின்கீழ் கண்ணியில் அகப்பட்டிரு ந்தனர். அவர்கள் மனந்திரும்பு வதற்குப் பதிலாக, நோவாவையும், அவருடைய வேலையையும், நீதியைக் குறித்த அவருடைய பிரசங்கத்தையும் ஏளனம் செய்தனர். அதன் முடிவாக நோவாவும், அவருடைய குடும்பத் தாரைத் தவிர அவர்கள் அனைவரும் ஜலப்பிரளயத்தில் வாரிக்கொள்ளப்பட்டு மரணமடைந்தனர். நோவா மாத்திரம் தன்னுடைய தலைமுறை காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே களங்கமற்றவராக, குற்றமற்றவராக, தூதர்களுடைய வித்துடன் ஒன்றாக கலவாதவராக, சுத்தமான ஆதாமின் இனமாக, உத்தமனாயிருந்தார். ஆகவே அது மனித இனத்தை நிலைத்திருக்கவும், மனித இனம் சிருஷ்டிக்கப்பட்டதின் தேவ நோக்கத்தை நிறைவேற்றவும் முடிந்தது.

நமது கர்த்தருடைய பலியினால் ஆதாமுக்கும், அவனுடைய சந்ததிக்கும் உண்டான மீட்பும், அதனால் ஆதாமுக் குள் இழந்துபோன ஜீவனுக்கும், பூரணத்துக்கும் அவர்கள் உயிரோடெழுப்பப்படும் ஒரு சந்தர்ப்பம் சம்பாதிக்கப்பட்டது. பலவான்களான அந்த இராட்சதர்களுக்கு இது எவ்வித கருத்திலும் பொருந்தாது. ஏனெனில் அவர்கள் முறைகேடாகப் பிறந்தவர்கள். அவர்களுடைய ஜீவன் தகப்பனாகிய ஆதாம் மூலம் வந்ததில்லையாகையால், அது கிறிஸ்துவால் மீட்கப்படவுமில்லை, அவர்கள் முறைகேடாகப் பிறந்தவர்களும், அங்கீகரிக்கப்படாத இனமுமாகையால், நம்பிக்கையில்லாமல் அழிந்துபோனார்கள்.

## ஜலப்பிரளயத்திலிருந்து நமக்கு கிடைக்கும் பாடம்

நமது கர்த்தராகிய இயேசு ஜலப்பிரளத்துக்கும், அது தொடர்பாக நடந்த நிகழ்ச்சிகளுக்கும் நம்முடைய கவனத்தைத் திருப்பும்படி அழைக்கிறார். (மத். 24 : 37-39; லூக். 17 : 26, 27). மேலும் இந்த சுவிசேஷ யுகத்தின் இறுதியில், சரியாக அதற்கு இணையான ஒரு காரியத்தை அறிவிக்கிறார். நோவாவின் நாட்களில் நடந்தது போல அவர்கள் புசித்துக் குடித்தார்கள். நட்டார்கள், கட்டினார்கள், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந் தார்கள். அப்படியே மனுஷ குமாரன் வந்திருக்கும் (ப்ரோஷியா – பிரசன்னமாயிருத்தல்) காலத்திலும் நடக்கும். உண்மைதான், நம்முடைய கர்த்தர் துன்மார்க்கத்தையோ அல்லது அவர்கள் வாரிக்கொள்ளப்படுதலிலோ இருக்கும் ஒற்றுமையைப் பற்றி கூறவில்லை. ஆனால் அவர்கள் அந்த காலத்தை அறியாதிருப் பதைப் பற்றியே குறிப்பிடுகிறார். எனினும், இந்த யுகத்தின் முடிவில் பெரிய மாற்றம் அல்லது பேரழிவு எதிர்பார்க்கப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார். அது குறிப்பிட்ட கருத்தில் அல்லது தரத்தில் நோவாவின் நாட்களில் நடந்த பேரழிவுக்கு ஒப்பானதாக இருக்கும் என்று கூறுகிறார்.

பேதுருவின் நிரூபத்திற்கு (1 பேது. 3 : 20, 21) திரும்புகையில், நாம் அங்கு ஜலப்பிரளயத்தில் காக்கப்பட்ட நோவா மற்றும் அவருடைய மனைவி அவருடைய மூன்று மகன்கள், அவர்களுடைய மனைவிகள் ஆகிய எட்டு பேரும் குறிப்பிட்டுத் தெரிவிக்கும் விளக்கம் பற்றியும் ஒரு குறிப்பு இருப்பதைக் காண்கிறோம். அதாவது இவர்கள் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரையும் அடையாளப்படுத்துகின்றனர். ஜலப்பிரளயம் மனுக்குலத்தின் மீதுள்ள சாபத்தைக் குறிக்கிறது. பொதுவான அம்சத்தில் அது ஆதாமின் நாள் முதற்கொண்டும், அதின் விசேஷமான உச்சக்கட்ட அம்சத்தில் கி.பி. 1914-ம் ஆண்டு முதற்கொண்டும் சாத்தானுடைய ராஜ்யம் அழிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது. பேழை ஜலப்பிரளய காலத்திலும் அதற்கு முன்பும், காலத்தைக் குறித்த அம்சங்கள் நீங்கலாக, கிறிஸ்துவையும் அவருடைய சுவிசேஷ யுக உடன்படிக்கையின் இரட்சிக்கும் வல்லமையையும் குறித்துக் காட்டுகிறது. அந்த காலத்துக்குரிய அம்சங்கள் தொடர்பாக, ஜலப்பிரளய வருடத்திலும், ஜலப்பிரளயத்துக்குப் பிறகுள்ள காலத்திலும் இது ஆபிரகாமின் உடன்படிக்கையையும் (ஆதி. 12 : 1-3) ஆபிரகாமின் வித்தாகிய கிறிஸ்துவை மையக் கருத்தாகக் கொண்டிருக்கும் தேவனுடைய ஆலோசனையைக் குறித்துக் காட்டுகிறது. குறைகளையெல்லாம் நிறைவாக்கி

திரும்ப சீர்படுத்தும் அவருடைய மகிமையான வல்லமை பூமியிலுள்ள சகல ஜாதிகளையும் ராஜ்யத்தில் ஆசீர்வதிக்கும், (கலா. 3 : 8, 16, 29) மனுக்குலம் சாபத்தின்கீழ் மரணத்திற் குள்ளாகச் சென்று கொண்டிருக்கிறது. இறுதியில் நிறைவேறுதலான பேழைக்குள் வராத அனைவரும் குறித்த காலத்தில் நித்தியமாக அழிக்கப் படுவர் ''**துன்மார்க்கர் யாவரையும் தேவன் அழிப்பார்.**'' (சங். 145 : 20; வெளி. 20 : 7-9, 15).

நான்கு மனித ஜோடிகளும், அவர்களுடனே குறைந்தது ஒரு ஜோடி சுத்தமானதும், அசுத்தமானதுமான விலங்கினங்களும் பேழைக்குள் சென்றதாக அறிகிறோம். நான்கு தெரிந்தெடுப்புக்குட்பட்ட வகுப்பினர் தங்களுடைய இந்த ஜீவியத்திலேயே ஆபிரகாமின் உடன்படிக்கையில் விசுவாசம் வைத்ததின் மூலமாக நற்சாட்சி பெற்றவர்கள்.

**1)** கிறிஸ்து, தலை மற்றும் சரீரம், சிறுமந்தை (லூக். 12 : 32; வெளி. 14 : 1).

**2)** மூப்பரான விசுவாசிகள்; இவர்கள் பரம அழைப்பு திறப்பதற்கு முன் தேவனோடு உடன்படிக்கை உறவுக்குள் வந்தவர்கள் (எபி. 11; யோவா. 11 : 11).

**3)** சுவிசேஷ யுக புது சிருஷ்டிகளான திரள் கூட்டத்தினர்; இவர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தங்கள் அங்கிகளை தோய்த்து வெளுத்தவர்களும், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள். (வெளி. 7 : 9-17; 19 : 9).

**4)** வாலிபரான விசுவாசிகள்; யோவே. 2 : 28-ல் சொல்லப் பட்டுள்ள வாலிபராகிய இவர்கள் திவ்விய சுபாவத்துக்குரிய (2 பேது. 1 : 4) பரம அழைப்பு முடிவடைந்த பிறகு சுவிசேஷ யுகத்தின் முடிவில் தங்கள் ஜீவிதங்களை தேவனுக்கென்று பிரதிஷ்டைசெய்து மரணபரியந்தம் விசுவாசத்தைக் காத்துக் கொண்டவர்கள்.

நோவா, சந்தேகமில்லாமல், விசுவாசத்தினால் நமக்கு உண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியான நம்முடைய கர்த்தருக்கு அடையாளம் (எபி. 11 : 7). நோவாவின் மனைவி, கிறிஸ்துவின் மணவாட்டிக்கும், ''**ஆட்டுக்குட்டியானவரின் மனைவிக்கும்**'' அடை யாளமாவார். (வெளி. 21 : 9; 19 : 7). சேம் மற்றும் அவருடைய மனைவி, யாப்பேத் மற்றும் அவருடைய மனைவி, காம் மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் முறையே மூப்பரான விசுவாசிகள், திரள்கூட்டம், வாலிபரான விசுவாசிகள் ஆகியோரு க்கும் அடையாளமாவார். ஆண்கள் அந்தந்த வகுப்புகளின் எல்லா தலைவர்களையும், பெண்கள் அந்தந்த வகுப்புகளில் உள்ள மற்றவர்களையும் குறித்துக் காட்டுகிறது. சுத்தமுள்ள மிருகங்கள் குவாசி எலக்ட் (Quasi-elect) என்று நாம் சொல்பவர்களைக் குறித்துக் காட்டுகிறது என்று அறிகிறோம். அதாவது ஆபிரகாம் மற்றும் மோசேயின், உடன்படிக்கைகளில் நம்பிக்கை வைத்து, அவைகளைக் கைக்கொண்டு வருகிற யூதர்கள். இவர்கள் அடையாளமாக சுத்தமுள்ளவர்கள், இவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். மேலும் மீட்கும் பலியில் நம்பிக்கையும், நீதியைக் கைக்கொள்ளுபவர்களான தற்காலிக நீதிமான்களும், தற்காலிகமாக சுத்தமுள்ளவர்கள். இவர்களும் இரட்சிக்கப்படுவார்கள். பேழையிலுள்ள சுத்தமில்லாத மிருகங் கள் இரட்சிக்கப்படும் தெரிந்தெடுப்புக் குட்படாத உலக மனுக்குலத்தைக் குறிக்கிறது. ஜலப்பிரளயத்தில் அழிந்து போனவர்கள் ஒரு கருத்தில் ஆதாமின் சாபத்தின்கீழ் அழிக்கப் பட்டவர்களையும், மற்றொரு கருத்தில் சாத்தானுடைய ராஜ்யத்தின் இயக்கங்கள் மற்றும், அமைப்புகளையும் மற்றும் இரண்டாம் மரண வகுப்பாரையும் குறிக்கின்றனர். (வெளி. 20 : 15; 21 : 8). பேழையில் இடம்பெற்ற மிருகங்கள் எதிர்பார்க் கப்பட்ட குவாசி எலக்ட் வகுப்பாரும் மற்றும் இரட்சிக்கப்படும் தெரிந்தெடுப்புக்குட்படாதவர்களும் ஆபிரகாமின் உடன்படிக் கைக்குள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அடையாளத்தில் பேழையானது ஜலப்பிரளயத்திலிருந்து மீட்கும் கருவியானது போல, தேவனுடைய நித்திய நோக்கமான ஆபிரகாமின் உடன்படிக்கை, அதற்குள் வந்து சேரும் அனைவரையும் அழிவிலிருந்து காப்பாற்றும் கருவியாக இருக்கிறது.

## இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகத்தின் அழிவு

ஜலப்பிரளய வெள்ளம் முதல் உலகத்தை அதாவது (2 பேது. 2 : 5; 3 : 6, 7) அப்போது இருந்து வந்த ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகளை அழித்ததுபோல இப்பொழுது இருக்கிற வானங்களையும் அதாவது ஆவிக்குரிய கட்டுப்பாடாகிய சாத்தானுடைய அதிகாரங்களையும், பூமியையும் அதாவது சடத்துவ பூமியை அல்ல – ஏனெனில் அது ''என்றென்றைக்கும்'' நிலைத்திருக்கிறது பிர. 1 : 4. ஆனால் அடையாளமான பூமியையே ஆகும். அதாவது சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் தற்போது இயங்கிவரும் மனித சமுதாயமாகும். (2 கொரி. 4 : 4). அதுவே கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காத பூமி ஆகும். (உபா. 32 : 1; எரே. 22 : 29). அழிவின் அக்கினியானது சொல்லர்த்தமான அக்கினியல்ல; (சொல்லர்த்தமான அக்கினி யும், அதில் ஒரு பங்கு வகிக்குமென்றாலும்கூட) அது அடையாளமான அக்கினியாகும். அதாவது, ''**தேவ கோபாக்கி னையான அக்கினி**'' ஆகும். (எசே. 38 : 19). ஜலப்பிரளயமானது சொல்லர்த்தமாக ஏற்பட்டதால் ''**இப்பொழுதிருக்கிற வானங் களையும், பூமியையும்**'' அழிக்கிற அக்கினியும் சொல்லர்த்தமாகத் தான் இருக்க வேண்டும் என்று சிலரை நம்பத் தூண்டுகிறது. ஆனால் இது எவ்வழியிலும் நிகழவே இல்லை. தேவனுடைய ஆலயம் முன்பு சொல்லர்த்தமான கற்களால் கட்டப்பட்டிருந்தது. ஆனால் மெய்யான ஆலயமாகிய சபையானது, ஒரு பரிசுத்த ஆலயமாக, ஒரு ஆவிக்குரிய மாளிகையாக கட்டப்படுகிறது; அதே சமயம் பூமிக்குரிய பொருட்களை வைத்துக் கட்டப்பட வில்லை என்ற உண்மையை மேற்கூறிய வாக்கியம் தள்ளிப்போடவில்லை. இயேசு சொல்லர்த்தமான ஒரு சிலுவையைச் சுமந்தார். ஆனால் அதற்காக நாம் சுமக்க வேண்டிய சிலுவையும் மரம் போன்ற பொருட்களால் ஆனதாகத்தான் இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. (லூக். 9 : 23; ரோம. 6 : 6; கலா. 2 : 20).

2 பேது. 3 : 10-12-ன்படி, ''**கர்த்தருடைய நாளில்**'' (இப்போது அந்த நாளில், உலகம் உண்டானது முதல் இதுவரை சம்பவித்திராததுமான மகா உபத்திரவத்தில் நாம் இருக்கிறோம் என்று நாமே சாட்சி பகர்கின்றோம். தானி. 12 : 1; மத். 24 : 21). வானங்கள் (அதாவது ஆவிக்குரிய கட்டுப்பாட்டின் சாத்தானு டைய வல்லமைகள்) ஒரு பெரிய கொந்தளிப்பில் ஒழிந்து போய்விடும். பூமியும் (தற்போதுள்ள சமுதாய கட்டமைப்பும், அதன் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக காரியங்களுடன்) இந்த அடையாளமான அழிவின் அக்கினியில் உருகிப்போகும். மேலும் அந்த வெப்பத்தின் அலையாலும் தணியாத வெப்பத்தின் அனலால் இந்த மகா உபத்திரவ காலத்தின் முரண்பாடுகள் மற்றும் அடங்காத கோபம் ஆகியவற்றில் ''**இப்போதுள்ள இந்தப் பொல்லாத உலகத்தின்**'' **(கலா. 1 : 4).** கிரியைகள் எரிக்கப் பட்டுவிடும், அழிக்கப்படும்.

இந்த மாபெரும் சம்பவம் செப்பனியாவின் புஸ்தகத்திலும் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் ஞாபகப்படுத்திக்

கொள்வோம். பூமியெல்லாம் தேவனுடைய எரிச்சலின் அக்கினியினால் அழியும் என்று சொல்லிய பிறகு, ''**அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு, அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக** (செய்தி) **மாறப் பண்ணுவேன்.**'' **(செப். 3 : 8, 9)** என்று அவர் தொடர்ந்து சொல்கிறார். இவ்வாறாக, பூமியனைத்தையும் அழிக்கக்கூடிய எரிச்சலின் அக்கினியாக நமக்குக் காட்டப்பட்டது, சொல்லர்த்தமான ஒன்றல்ல, ஏனெனில் ஜனங்களில் சிலர் இந்த அக்கினிக்கு தப்புவிக்கப்படுவர். (ஏசா. 24 : 6; மத். 24 : 22). சமூக அமைப்பானது முழுவதுமாக சுட்டெரிக்கப்பட்டாலும்கூட; பின்பு கர்த்தர் தமது ஜனங்களுக்கு, தம்முடைய தூய்மையான சத்தியத்தை அருளுவார். நீதியின் சூரியன் அதன் செட்டைகளின் கீழ் ஆரோக்கியத்துடன் உதிக்கும், சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (மல். 4 : 2; ஏசா. 11 : 9; 2 பேது. 3 : 13).

## இக்காலத்திலும் இராட்சதர்கள் உண்டு

ஆவிக்குரியதும், மாம்சத்துக்குரியதுமான வஸ்துக்கள் தகாதமுறையில் கூடி கலந்ததன் மூலமாக அக்காலத்தில் இராட்சதர்கள் உருவாக ஏதுவானது, அவர்கள்மூலமே பூமியில் வன்முறையும், அதைத் தொடர்ந்து ஜலப்பிரளயமும் வந்தது. நமது காலத்திலும் அதற்கு பொருத்தமான ஒன்றை நாம் காண்பது குறிப்பிடத்தக்கது தானா? "**பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷர்களைப் போல**" தற்காலத்திலும் மனிதருக்குள் பேர்பெற்றவர்களும், எல்லையற்ற அதிகாரம் பெற்றவர்களான இன்றைய இராட்சதர்கள் நம்மிடம் இல்லையா? அவர்கள் டிரஸ்டுகள் கூட்டமைப்புகள், உலக நாடுகளின் கூட்டமைப்பு, பூமியின் மீதுள்ள பணக்கார பிரபுக்கள் என்ற பெயர்களில் சொல்லப்படவில்லையா? இவை கடந்த காலத்தில் கனவிலும் கண்டிராத அளவில் பொருளாதாரம் மற்றும் நிதி சம்பந்தமாக வலிமையுள்ளவைகளாக மாறியிருப்பதைக் காண முடியவில்லையா? இவைகளின் நடவடிக்கைகள் மூலமாக பூமியின் மீது மகா உபத்திரவ காலமும், வன்முறையும் வந்துவிட்டது இல்லையா? நிச்சயமாகவே இதுதான் அந்த துல்லியமான காட்சி.

இப்பொழுதும், அப்பொழுதும் இந்த இராட்சத கழகங்கள், டிரஸ்டுகள், கூட்டணிகள், பெருத்த செல்வவான்கள் ஆகியவை எந்த அர்த்தத்தில் வளர்ந்தன? அவைகள் புறமதத்தினரிடமிருந்து தோன்றினவையா? ஆ, இல்லை. புறமதத்தினர் ஒருபோதும் அப்படிப்பட்ட காரியங்களைக் கனவு கூடக் கண்டதில்லை. ஒருபோதும் இந்த சங்கங்களின் பிடியில் உள்ள வல்லமையையும், அதிகாரத்தையும் மனிதர் மீது செலுத்துவதை அவர்கள் கற்பனையும் செய்து பார்த்ததில்லை. புறமதத்தினர் உண்மையிலேயே தாங்களாகவே இந்த மிகப்பெரிய இராட்சதர்களிடம் கஷ்டப்படுகின்றனர், அந்த இராட்சதர்கள், கிறிஸ்தவ(?) தேசங்களின் அரசு இயந்திரத்தை நவீன பேய்த்தனமான போர் நடவடிக்கை கலைகளில் அவர்களுக்கு பயிற்சியளிக்கப் பயன்படுத்தி தங்கள் சுயபெலத்தையும், வருவாயையும் பெருக்கிக் கொள்வதுடன் இழிவான ஆதாயத்திற்காகவும் தங்கள் சுயபெலத்தை பெருக்கிக் கொள்வதற்காகவும் புறமதத்தைச் சார்ந்த மக்களைக் கட்டாயப்படுத்துகின்றனர். உண்மையிலேயே இந்த ராட்சதர்கள், யுத்தங்களை நடத்துவதும், தேசத்தின் ஜனங்களை ஆளுகிறதுமில்லையா? நிச்சயமாகவே இது அப்படித்தான் நடக்கிறது. ஆனால் இயற்கையாகவோ அல்லது புறமதங்களிலிருந்தோ இல்லாவிட்டால் இந்த இராட்சதர்கள் பின் எங்கிருந்து வந்தார்கள்? இதற்கு நாங்கள் சொல்லும் பதில் என்னவென்றால், அவர்கள் தவறாக வழிநடத்தப்பட்ட ஆவிக்குரிய வீரியத்தால் உண்டான சந்ததியினர் ஆவர். கர்த்தருடைய ஆவியானது பிரதிஷ்டை செய்த தமது ஜனங்களில் கிரியை செய்து அவர்களைச் சுற்றிலும் செல்வாக்கை பிரயோகித்து மொத்தத்தில் இன்றைய நாளின் நாகரீகமாக எண்ணப்படுவதைத் தோற்றுவித்தது. இவ்வாறாக நாகரீகமடைந்தவர்களில் பெரும்பாலானோர் உண்மையான கிறிஸ்தவர்களாயிருப்பதிலிருந்து வெகு தூரம் விலகிப் போய் விட்டனர். இருந்தபோதிலும் அவர்கள் பெற்றிருக்கும் வெளிச்சம் (அறிவொளி), கிறிஸ்தவ மார்க்கத்திலிருந்து வந்ததுதான்.

இந்த வெளிச்சம், தவறான முறையில் பெறப்பட்டு, உலகில் தவறான முறையில் பிரயோகிக்கப்பட்டு, சுயநலத்தின் ஆவியைப் பிறப்பித்து, அது வளர்ச்சியடைந்து இந்த இராட்சதர்களில் முதிர்ச்சியடைந்தது; இந்த முழு உலகமும் தற்போது பெரும்பாலும் அவைகளின் அதிகாரத்திலும், அவைகளின் பிடியிலும்தான் உள்ளது. ஆனால் கர்த்தர் இப்போதுள்ள ஸ்தாபனங்கள் அனைத்தையும் அழித்துப் போடுவதற்கு தமது பராமரிப்பில் ஓர் மாபெரும் அழிவை அனுமதித்திருக்கிறார். அவர் மனுஷனுடைய கோபத்தை, அவரை மகிமைப்படுத்தும்படியாகவும் (சங். 76 : 10) கவிழ்த்துப் போடும்படி கிரியை செய்யவும், முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையேயும், இராட்சதர்களுக்கும் அவர்களுடைய செல்வாக்கின் வலிமை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் அதிகமதிகமாக வருகிறவர்களுக்கும் இடையேயும் அக்கினியைத் தூண்டிவிட்டு மரணத்திற்கேதுவான யுத்தத்தை நடத்துகிறார். இவை உண்மையாகவே இப்பொழுது இருக்கிற பொல்லாத உலகத்தின் சமுதாய, மத, அரசியல், சமூக மற்றும் நிதி நிறுவனங்களை மகா உபத்திரவ கால அக்கினி மற்றும் உபத்திரவம் அழித்துவிடும்.

இந்தக் காலத்தில் யார் காக்கப்படுவர்? இந்த கடும்புயலில் யார் நிலை நிற்பர்? பிரதிஷ்டைசெய்து அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையானது, ''**ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்**'' **(லூக். 21 : 36)** என்பதே. இந்த பொதுவான மனிதருடைய இருதயங்களை சோதித்தறியவும் உபத்திரவம் என்ற கலப்பையால் நன்கு ஆழமாக உழவும் உலகமனைத்தின் மீதும் ஒரு கண்ணியைப் போல வரப்போகும், பொதுவான உபத்திரவம் மற்றும் கண்ணியில் நாம் விழுந்து போகாமலிருக்க நாம் கவனமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அது முடிவில், புது யுகத்தின்கீழ் ஆசீர்வாதமானதாகக் காணப்படும். ஆனால் தற்காலத்தில் அது மிகுந்த கொடூரமான உபத்திரவமாகவே காணப்படும். ஆம், ஒரு வானவில் வாக்களிக்கப்பட்டுள்ளதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். அந்த வானவில்லை விசுவாசக் கண் உள்ளவர்களும், காரியங்களை தேவனுடைய வார்த்தையின் மூலமாக பார்ப்பவர்களும் மட்டுமே காணமுடியும். அந்த வானவில் தேவனுடைய வாக்குத்தத்தம் ஆகும்; அதாவது இனி ஒருபோதுமே அம்மாதிரியான ஒரு பேரழிவு உலகத்தின்மீது ஏற்படாது என்பதற்கும், இந்த அழிவுடனே, தேவனுடைய நேச குமாரனுடைய ராஜ்யம் ஆரம்பிக்கப்படும் என்பதற்கும், மறுபடி ஒருபோதும் இந்த உலகம் விழுந்துபோன மனிதரிடமோ, அல்லது இந்த உலகத்தின் அதிபதியின் பிசாசுகளிடமோ, அல்லது இவ்வுலகின் ராஜ்யங்களிடமோ விடப்படுவதில்லை. ஆனால் இந்த உலகத்தை மீட்டுக் கொண்டவரே அதன் கர்த்தரும், ராஜாவுமாக இருப்பார். அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கோ, மற்றவர்களுக்கோ விடப்படுவதில்லை. (தானி. 2 : 44). மேசியா கீழ்ப்படியாதவை அனைத்தையும், தேவனுடைய சித்தத்துக்கு முரணானவைகளையும் அடக்கி, கீழ்ப்படுத்திய பின்பு பிதாவாகிய தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு ராஜ்யம் அப்பொழுது பிதாவாகிய தேவனிடம் ஒப்படைக்கப்படும். (1 கொரி. 15 : 24-28).

# வேதாகம வினா பெட்டி
**Bible Question Box**

## நோவா கால ஜலப்பிரளயம் உலகளாவியதா அல்லது சிறு பகுதியில் மட்டும் ஏற்பட்டதா?

**கேள்வி** : நோவா கால ஜலப்பிரளயம் உலகம் முழுவதையும் தாக்கியதா அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் நேரிட்டதா?

**பதில்** : உலகம் முழுவதும் ஜலப்பிரளயம் திடீரென வந்ததாக விஞ்ஞான உண்மைகள் காட்டுகின்றன. இப்பொழுதும் சனி கிரகத்தைச் சுற்றி இருக்கும் வட்டவடிவமான மூடாங்கு போன்றுள்ள பல வளைய அமைப்புகள்போலவே (Canopies) பூமி சிருஷ்டிக்கப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் பூமியைச் சுற்றிலும் இருந்தன. நீண்ட கால இடைவெளிகளில் அவை ஒவ்வொன்றாகப் பூமியில் விழுந்து பூமியோடு சேர்ந்துவிட்டன. அவ்விதம் வந்ததில் கடைசியானதுதான், இந்த நோவா காலத்து நீர் வளையம். இவ்விதமாக விஞ்ஞானம் வேலியன் தத்துவத்தின் (Valian theory) உண்மையை விளக்குகின்றன. தேவன் பூமியின் மேலுள்ள தண்ணீரையும், பூமியிலிருந்து அதிக உயரத்திலுள்ள தண்ணீரையும் பரந்த இடைவெளி மூலம் பிரித்தார். (ஆதி. 1 : 7) என்ற வேத வசனத்திற்கு இது இசைவுள்ளதாக இருக்கிறது. Firmament என்று கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் (ஆதி. 11 : 7) மொழிபெயர்க்கப்பட்டுள்ளது தவறாகும். (Rakia) ராகியா என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் Expanse அதாவது பரந்த இடைவெளி என்பதே. ரோதர்ஹாம் மற்றும் லீசர் வேதாகமம் பார்க்கவும். (E.Vol 2 என்ற புத்தகத்தில் 362 முதல் 366-ம் பக்கம் வரைப் பார்க்கவும்). நமது இப்பொழுதுள்ள ஆகாய மண்டலம் அந்த பரந்த இடைவெளியை நிரப்பியுள்ளது.

ஒரு காலத்தில் கூடாரம் போன்ற ஏழு வளையங்கள் பூமியைச் சுற்றிலும் இருந்தன. பூமியின் ஆதி தோற்ற காலத்தில் வெப்பத்தினால் வளையங்களின் கனத்தைப் பொறுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு உயரத்தில் நிலைகொண்டிருந்தன என்பது தெளிவாக அறியப்பட்டுள்ளது. அதனதன் யுகத்தின் முடிவில் ஒவ்வொரு வளையமாக பூமியை வந்தடைந்தது. உருகிய நிலையிலுள்ள பொருள்களிலுள்ள கரிமப் பொருள் எரிந்து மடிந்தபின் உண்டான எரிமலைக் குழம்பினாலான கருங்கல்லாலானது பூமியின் மேற்பரப்பில் அடுக்குகளாகப் படிந்துள்ளன. கொலரோடோ நதியின் மிகப் பெரிய நதிப் பள்ளத்தாக்கில் ''கிராண்ட் கேன்யான்'' (Grand Canyon) என்ற இடத்தில் அந்த ஏழு படிவங்களும் மிக அதிக அளவில் தெளிவாகக் காணப்படுகின்றன. ஏழாவது அடுக்கு என்று இங்கு நாம் அழைக்கிறோம். இந்த வளையங்களில் கடைசியானது சுத்தமான நீராலானது. மகா ஜலப்பிரளயத்தில் அந்த நீர் தான் பூமியின் மேல் விழுந்தது. (கனம் அதிகமான தாதுப்பொருட்கள் முதலியன அதனதன் கனத்தின்படி கீழ் வளையங்களுக்குப் போய் சேர்ந்தன; தண்ணீர் மாத்திரம் கடைசியில் மீதமிருந்த வளையத்தில் இருந்தது).

ஜலப்பிரளயத்திற்கு முன் பூமியைச் சுற்றிலும் தண்ணீர் வளையம் இருந்தபடியினால் பூமியில் எங்கும் ஒரே சீரான சீதோஷண நிலையில் பூமி இருந்தது. அதனால் துருவப் பகுதியிலும், பூமத்தியப் பகுதியிலும் ஒரே விதமான சீதோஷண நிலையும், ஒரேவித தாவரமும் காணப்பட்டது. அது நமக்கு எப்படித் தெரியும்? எப்படியெனில் மிகப் பெரிய யானையைப் போன்ற மிருகங்கள், மான் இனத்தைச் சேர்ந்த மிருகங்கள் முதலியவைகளின் உடல்கள், வயிற்றினுள் ஜீரணமாகாத புல்லுடன் சைபீரிய பனிப்பகுதியில் உறைந்துபோன நிலையில் பனிக்கட்டிக்குள் புதைந்திருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை வட துருவ பிரதேசத்தில் மேய்ந்து கொண்டிருந்தபொழுது மேலிருந்து வந்துகொண்டிருந்த பிரளயத்தின் தண்ணீரால் திடீரென மூழ்கடிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த வெள்ளம் துருவப் பகுதியில் திடீரென்று வந்து உறைந்துள்ளது. இதனால் உண்டான பனியும், பனி மலைகளும் இந்த உடல்களை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தங்களுடைய பாதுகாப்பான அரவணைப்பில் வைத்துள்ளது. சமீபத்தில் அவைகள் கண்டுபிடிக்கப்பட்டு பிரளயம் உண்மையானது என்றும் உலகம் முழுவதும் பிரளயம் ஏற்பட்டுள்ளது என்பதற்கும் உண்மையான ஆதாரத்தைத் தந்திருக்கின்றன.

மேலும் பூமியின் மேற்குப் பாதியில் உள்ள பாறைகளில் பனி மலைகளால் உண்டான கீறல்களை நாம் காணலாம். வட அமெரிக்க தீபகர்ப்பத்தின் மிக வெப்பப் பகுதிகளில் பல இடங்களில் இந்தக் கீறல்களைக் காணலாம். நிலையான பாறைகளில் (Fixed rocks) அவ்வித கீறல்கள் எப்பொழுதும் வடக்குத் தெற்காகவே அதாவது வடக்கிலிருந்து தெற்கு நோக்கியே பதிந்துள்ளன. கிழக்கு மேற்காக ஒன்றுமே இல்லை. வட அமெரிக்கக் கண்டத்தில், ஜலப்பிரளயத்திற்கு முந்திய கால மிருகங்களின் எழும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சில வருடங்களுக்கு முன் ஒக்லகாமா என்ற இடத்தில் ஒரு பாறை விளிம்பில் புதைந்திருந்த யானையைப் போன்ற ஒரு பெரிய மிருகத்தின் எலும்புக்கூட்டை ஆராய்ச்சிக்காகத் தோண்டி எடுக்கப்படும் பணியில் உதவி செய்யும் வாய்ப்பு இக்கட்டுரை ஆசிரியருக்குக் கிடைத்தது. தாதுப்பொருளாக அரிசோனா நாட்டில் மக்கிப்போன காடுகளில் 200 அடிக்குக் கீழ் புதைந்துள்ள இராட்சத மரங்கள் வடக்குத் தெற்காகத்தான் புதைந்துள்ளன. (கிழக்கு மேற்காக அல்ல). மரங்களின் வேர் வடக்குத் திசையிலும், மரங்களின் உச்சிப்பகுதி தெற்குத் திசையிலும் இருக்கின்றன. இவைகள் வட பகுதியிலிருந்து திடீரென அதிகமான தண்ணீரால் அடித்துச் சென்றுள்ளதைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

ஜலப்பிரளயக் காலத்தில் திடீரென தண்ணீர் மழையாகப் பொழிந்ததற்கும், பூமியினுடைய வெப்ப நிலையிலும் சூரியனுடைய வெப்ப நிலையிலும் எவ்வித மாற்றமும் இல்லாமல் நிலையாக வைத்திருக்கக் காரணமாயிருந்த தடுப்புத் திரை போன்ற வளையம் திடீரென வெடித்து ஆர்க்டிக் பிரதேசத்தின் பனி மலைகளையும், பனிமூடிய பிரதேசங்களையும் உண்டாக்கியது என்பதற்கும், ஜலப்பிரளயத் தண்ணீர் துருவப் பிரதேசத்திலிருந்து பூமியின் மையப் பகுதியான பூமத்திய ரேகையை (Equator) நோக்கி ஓடிச் செல்கையில், மையப் பகுதியிலிருந்து வெளிப்புறத்தை நோக்கி சுழலும் மைய விலக்கு விசையின் (Centrifugal force) காரணமாக பூமியின் மையப் பகுதியாகிய பூமத்திய ரேகையில் தண்ணீர் உறைதல் குறைவாகவும், அதே வேளையில் தண்ணீரை தூரத் தள்ளிவிடுதல் விசை பூமியின் மையப் பகுதியில் அதிகமாகவும், துருவப் பகுதியில் படிப்படியாக குறைவாகவும் இருக்கும் என்பதற்கும், துருவப் பகுதியில் தண்ணீர் உறைதல் அதிகமாகவும், பனிக்கட்டியும், தண்ணீரும் துருவங்களிலிருந்து பூமியின் மையப் பகுதியை

நோக்கியும் செல்கிறது என்பதற்கும் ஆதாரமான சாட்சியமாக இது இருக்கிறது. மனித இனத்தின் தொட்டில் மிக விசேஷமாகக் கையாளப்பட்டுள்ளது. அது முதலில் அமிழ்த்தப்பட்டும் பின் தகுந்த நேரத்தில் உயர்த்தப்பட்டும் உள்ளது. பேழையானது தண்ணீரில் பொதுவான போக்கில் ஒரு பக்கமாக, அமைதியான பாதையில் மிதந்து சென்றது. மனுக்குலமானது வசித்த அங்குள்ள பள்ளமான எல்லாப் பகுதியிலும் மிகவும் அதிகமான வண்டல் மண் படிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதின் மூலம் அங்கே பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வந்திருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டப்படுகிறது.

இவ்விதமாக பரி. வேதாகமம் மாத்திரமல்ல பல நாட்டுப் பண்டைய வரலாறுகளும் உறை பனி யுகமும், சைபீரிய நாட்டிலும் வேறு பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட, (உறை பனியில் விறைத்துப்போன) மிருகங்களின் உடல்கள் முதலியனவும், புவியியல் ஆராய்ச்சி சாஸ்திரமும் போன்ற யாவும் ஜலப்பிரளயம் உலகம் முழுவதிலும் நிகழ்ந்துள்ளது என்று நிரூபிக்கின்றன. வேலியன் கோட்பாடு (Valian theory) அதற்கு விஞ்ஞான விளக்கம் தருகிறது.

## ஆதி. 6 : 19, 20 வசனங்களை ஆதி. 7 : 2, 3 வசனங்களோடு இசைவு படுத்துதல்

**கேள்வி 2**: ஆதி. 6 : 19, 20 வசனங்களில் பூமியின் மீதெங்கும் வித்தை உயிரோடு காக்கும் பொருட்டு, மாம்சமான ஜீவன்களிலும் வகை ஒன்றுக்கு **ஒரு ஜோடு** அவனோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் நோவாவுக்கு கொடுத்த கட்டளைகளை ஆதி. 7 : 2, 3 வசனங்களில் அங்கே சுத்தமான சகல மிருகங்களில் **ஏழு ஜோடும்**, ஆகாயத்துப் பறவைகளில் ஏழு ஜோடுமாக அவனோடு பேழைக்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னதோடு எப்படி இசைவு படுத்துவது?

**பதில்** : இந்த இரண்டு கட்டளைகளும் ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ளவைகளாக இருக்கின்றன என்று சிலர் நினைக்கின்றனர். ஆனால் உண்மையில் அப்படியல்ல. பிதாவாகிய தேவன் முதல் முதலில் நோவாவிடம் ஜலப்பிரளயத்தைப் பற்றி அறிவுரைகள் கூறினார். தேவன், நோவாவிடம் 120 வருடங்களுக்கு முன்பாக ஜலப்பிரளயத்தைப் பற்றிய பொதுவான கட்டளைகளைக் கொடுத்தார். (ஆதி. 6 : 3, 14, 17-20) ஜலப்பிரளய காலத்தில் மிருக ஜீவன்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டு அவைகளின் வித்தை உயிரோடே காக்க வேண்டும் என்பதைப் பற்றியும், ஒவ்வொரு இனத்திலும் ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடும், வித்தைக் காக்கும்படி உயிரோடிருக்க வேண்டும் என்று கூறியது ஜலப்பிரளயம் வருவதற்கு சுமார் 120 வருடங்களுக்கு முன் என்பதை நாம் அறிந்து கொண்டால் எந்தக் குழப்பமும் இல்லை. இப்படித்தான் தேவன் கட்டளையிட்டார். அந்தப்படியே தான் அது நடந்தது. சுத்தமான மிருகங்களும் கூட அவை உண்மையாகவே "**இரண்டிரண்டாகப்**" பேழைக்குள் சென்றன. (மிருகங்கள் வெறும் எண்ணத்தை அடிப்படையில்லாமல் ஜோடு ஜோடாகச் சேர்க்கப்பட்டது). தேவன் கட்டளையிட்டபடி ஆணும் பெண்ணுமாக சேர்க்கப்பட்டது. (ஆதி. 7 : 9). "சுத்தமான மிருகங்களிலும் சுத்தமில்லாத மிருகங்களிலும், பறவைகளிலும்" அப்படியே உண்மையாக நடைபெற்றது. (ஆதி. 7 : 8).

ஆதி. 6 : 19, 20-ல் கொடுக்கப்பட்டப் பொதுவான கட்டளைகளுக்கும் ஆதி. 7 : 2, 3-ல் அதிக நாட்களுக்குப்பின் சுத்தமான மிருகங்கள் சம்பந்தமாகவும் ஆகாயத்துப் பறவைகள் சம்பந்தமாகவும் தேவன் கொடுத்த கூடுதலான மிகவும் திட்டவட்டமான கட்டளைகளுக்கும் எந்தவிதமான முரண்பாடும் கிடையாது. அப்பொழுது (அதாவது ஆதி. 7 : 2, 3 சம்பந்தப்பட்ட காலக்கட்டத்தில்) நோவாவையும் அவன் குடும்பத்தினரையும் தேவன் பேழைக்குள் போகச் சொன்னார். ஆதி. 6 : 22-லும் 7 : 5-ம் தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்தார் என்று நாம் வாசிக்கிறோம். ஒன்றுக்கொன்று முரண்பாடான கட்டளைகளைக் கொடுத்திருந்தால் நோவாவினால் அவைகளைச் செய்திருக்க முடியாது. ஆதி. 7 : 2, 3-ன் எபிரேய வசனங்கள், சுத்தமான மிருகங்களிலும், சுத்தமான பறவைகளிலும் ஏழு ஜோடுகளைக் குறிக்கிறதா அல்லது வெறும் ஏழு எண்ணிக்கைகளைக் குறிக்கிறதா என்று நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. *ஆனால் ஆங்கிலத்தில் ஏழு என்ற எண்ணிக்கை மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.* சில அறிஞர்கள் சுத்தமான மிருகங்களிலும் பறவைகளிலும் ஏழு ஜோடுகளைக் குறிக் கின்றன என்று நினைக்கிறார்கள். அதே நேரத்தில் மற்றவர்கள் அப்படியானால் அவை பேழையில் இடநெருக்கடியை உண்டாக்கிவிடும். எனவே அது சுத்தமான மிருகத்தில் ஏழு எண்ணிக்கை என்றும், பறவைகளில் ஏழு எண்ணிக்கை என்றும் குறிக்கிறது. அதாவது மூன்று ஜோடுகளும் மீதமுள்ள ஏழாவதானது பலிக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கிறது என்றும் கருதுகிறார்கள். ஏனெனில் ஆதி. 8 : 20 ஆம் வசனம், நோவா "***சுத்தமான மிருகங்களிலும் சுத்தமான பறவைகளில் சிலவற்றையும்***" தகன பலியாக பலியிட்டார் என்று காட்டுகிறது. ஆதி. 7 : 2, 3 வசனங்களுக்கும், 6 : 19, 20 வசனங்களுக்கும் "**வகை ஒன்றுக்கு ஒரு ஜோடு**"-க்கும் எந்த வித முரண்பாடோ, வேறுபாடோ இல்லை. ஆதி. 7 : 9-ம் வசனம் ஆதி. 7 : 2, 3-லிருந்து வேறுபடவும் இல்லை. வித்தை உயிரோடு காக்கும் பொருட்டு சுத்தமானதும் சுத்தமில்லாததுமான எல்லா மிருகங்களும், "**ஆணும் பெண்ணுமாக**" ஜோடாக "**இரண்டு இரண்டாக**" பேழைக்குள் செல்ல வேண்டும் என்பதுதான் கொடுக்கப்பட்ட ஒழுங்கு (சட்டம்) ஆகும். அந்த ஒழுங்கு மீறப்படவில்லை. ஆனால் ஆதி. 7 : 2, 3 வசனங்களினால் சுத்தமான மிருகங்களிலும் பறவைகளிலும் ஒரு ஜோடுக்கு கூடுதலாக இருக்க வேண்டும். அவை ஏழாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

## பேழை தயாரித்தலில் நோவாவின் நோக்கம்

**கேள்வி 3**: நோவா "**பயத்தினால் தூண்டப்பட்டு**" பேழையைத் தயாரித்தார் என்று ஆங்கில வேதாகமத்தில் வாசிக்கிறோம்; எபி. 11 : 7; அவ்விதம் இருக்கும்போது, நோவா எப்படி அடையாளமான இயேசுவாக இருக்க முடியும்?

**பதில்** : எபி. 11 : 7-ல் ஆங்கில வேதாகமத்தில் fear "**பயம்**" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கு எபி. 12 : 28-ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல "**பயபக்தி**" என்ற அர்த்தம் உண்டு. "***பயபக்தியினால் நிறைந்த***" என்பது தான் சிறந்த மொழிபெயர்ப்பு என்று கூறுகிறார். நோவா பயத்தினால் தூண்டப்பட்டார் என்று சாதாரண கருத்தில் ஆங்கில வேதாகமத்தில் குறிப்பிட்டிருப்பதை கிரேக்க வாசகம் நோவா பயபக்தியினால் செய்தார் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது. [இது நமது தமிழ் வேதாகமத்தில் "**நோவா பயபக்தியுள்ளவனாகி .... பேழையை உண்டு பண்ணினான்**" என்று சரியாகவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.]

## தேவன் முன்பாக நோவாவின் நிலை

**கேள்வி 4**: இயேசுவே "***வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்.***" **(யோவா. 14 : 6). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனிதர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமமும் கட்டளையிடப்படவும் இல்லை. (அப். 4 : 12)** "***நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மரணத்தைப் பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்***" **(2 *தீமோ.* 1 : 10).** இவைகளை நோவா ஒருபொழுதும் கேள்விப் பட்டதே இல்லை. நோவா இரட்சிக்கப்பட்டிருக்கிறாரா? அவர் ஒரு கிறிஸ்தவரா? நோவா இப்பொழுது எங்கே இருக்கிறார்?

**பதில் :** நோவா ஒரு கிறிஸ்தவருமல்ல, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி சென்றவருமல்ல. அவருடைய சீடருமல்ல. மத். 16 : 24. ஏனென்றால் அவர் இயேசு கிறிஸ்துவின் நாட்களுக்கு முன் வாழ்ந்தவர். நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான் (யோவான் ஸ்நானகன்) வரைக்கும் வழங்கி வருகிறது. யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள். (லூக். 16 : 16) நம்முடைய கர்த்தரின் முதல் வருகைக்கு முன் ஒருவரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்திருக்க முடியாது. முதலாவது வருகையில் அவர் நமக்காக (அவருடைய சபைக்காக) அவருடைய மாம்சமாகிய திரையின் வழியாய் நமக்காக பிரதிஷ்டை செய்யப்பட்ட புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை ....... திறந்தார். (எபி. 10 : 20) நோவா இன்றும் இரட்சிக்கப்படவில்லை. ஆபிரகாமைப்போல் அவன் "**தேவனை விசுவாசித்தான்**" அது (அவனுடைய விசுவாசம்) அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அவன் தேவனுடைய சிநேகிதன் என்னப்பட்டான். (யாக். 2 : 23; ரோம. 4 : 9, 22). ஆதாமுக்கும் அவனுடைய சகல வம்சங்களுக்கும் நோவா உட்பட ஈடு பலியாக பிற்காலத்தில் சிந்தப்படப் போகிற கிறிஸ்துவின் இரத்தத்தின் அடிப்படையில் முன் கூட்டியே தேவன் நோவாவுக்கு அவ்விதம் செய்ய முடிந்தது.

பரி. பவுல் அப்போஸ்தலரால் எபிரேயருக்கு எழுதின நிருபத்தின் 11-ம் அதிகாரத்தில் விவரித்தபடி நோவா மூப்பரான விசுவாசிகளில் ஒருவராவார். அவரைக் குறித்து 39-ம் மற்றும் 40-ம் வசனங்களில் அப்போஸ்தலர் எழுதியிருக்கிறார். "**இவர்களெல்லாரும்** (நோவா உட்பட வசனம் 7) **விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று** (சபைக்கென்று) **முன்னதாக நியமித்திருக்கிறார்.**" சுவிசேஷ யுகத்தின்பொழுது, தேவன் தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தை (அப். 15 : 14) ஆபிரகாமின் வித்தை (கலா. 3 : 8, 16, 19) அதாவது சபையை சிருஷ்டித்துக் கொண்டிருந்தார். அவர்கள் மூலமாய் தேவன் உலகத்திலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதிப்பதற்கு தீர்மானித்திருந்தார். தேவன் தம்முடைய சுவிசேஷ யுக தெரிந்து கொள்ளப்பட்டோர் யாவரையும் தெரிந்தெடுத்து பூரணராக்கின பின்பு இந்த யுகம் முடிவடைகிற மகா உபத்திரவத்தின் நாட்களில் சாத்தானின் இராஜ்யமாகிய இந்தப் பொல்லாத உலகத்தை கவிழ்த்து ("**உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக**" என்று நாம் ஜெபிக்கும்) அவருடைய ராஜ்யத்தை உலகத்திலே ஏற்படுத்துவார். தேவனுடைய கிருபையினாலே ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்த இயேசு (எபி. 2 : 9) பிரேதக் குழிகளில் மரண நித்திரையிலிருக்கும் யாவரையும் எழுப்புவார் (யோவா. 5 : 28, 29) அவர்களில் ஒருவரான நோவா "நன்மை செய்தவரானபடியினால்" "ஜீவனுக்கான உயிர்த்தெழுதலில்" உயிர்த்தெழுந்து வருவார். அப்பொழுது இயேசு "எல்லோரையும் (நோவா உட்பட) தன்னிடத்தில் இழுத்துக் கொள்வார். (யோவா. 12 : 32) சுவிசேஷ யுகத்தில் ஆட்டுக் குட்டியானவரின் மனைவியாக மணவாட்டி வகுப்பினரை தெரிந்தெடுக்கும் போது பிதாவாகிய தேவனே இழுத்துக் கொள்ளுதல் வேலையைச் செய்கிறார். இயேசு அல்ல. (யோவா. 6 : 44) உலகத்தின் நியாயந்தீர்ப்பின் நாளில் நோவா சத்திய வெளிச்சம் கிடைக்கப் பெற்று இயேசுவே இரட்சகர் என்று அறிந்து கொள்வார். ஏனென்றால் பிதா ஓர் நாளை குறித்திருக்கிறார். (ஒரு ஆயிர வருட நாள் 2 பேது. 3 : 7, 8) அந்த நாளில் அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பார். [இது சபையின் நியாயத்தீர்ப்பிலிருந்து வித்தியாசமானது. சபையானது சுவிசேஷ யுகத்தில் நியாயத்தீர்ப்படைந்து விட்டது] (1 பேது. 4 : 17) அதிலே தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு (மனிதராகிய இயேசு கிறிஸ்துவைக் கொண்டு 1 தீமோ. 2 : 3, 6) பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் (அப். 17 : 31). "**உலகத்திலே வருகிற எந்த மனிதனையும் (நோவா உட்பட) பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி**" **(யோவா. 1 : 9).** அந்த மெய்யான ஒளி இயேசுவே.

பரி. வேதாகமத்தின்படி மற்ற மூப்பரான விசுவாசிகளாகிய ஆபிரகாம், தாவீது, முதலானோர் போல் நோவாவும் உயிர்த்தெழுதலுக்காக மரண நித்திரையில் காத்திருக்கிறார். (ஏசா. 63 : 16; அப். 2 : 23). ஏனெனில் ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1 கொரி. 15 : 22). முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறும் சிலாக்கியம் உள்ளவர்களாகிய சபையைப் பற்றியும் (வெளி. 14 : 4; 20 : 6) "**இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் எல்லா மனிதரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்பட்டவர்களாயிருப்போம்**" அப்பொழுது "**கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே**" (அழிந்திருப்பார்களே - perished) என்று சொல்லப்பட்டிருக்கிறது. (1 கொரி. 15 : 19, 18). "**நீதிமான்களும் (நோவா உட்பட) அநீதிமான்களுமாகிய மரித்தோர்களும் உயிர்த்தெழுந்திருப்பது உண்டு**" **(அப். 24 : 15)** என்ற நிச்சயம் நமக்கு வேத வாக்கியங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நோவா மற்ற மூப்பரானவிசுவாசிகளைப் போல விசுவாசத்தினால் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார். "**விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்.**" நோவா மற்ற மூப்பரான விசுவாசிகளைப்போல உண்மையுள்ளவராய் துன்பங்களைச் சகித்தார். நீதியினிமித்தமும் துன்பப்பட்டார். ஆகையால் பொதுவான மனுக்குலத்திற்கு கிடைக்காத "**மேன்மையான உயிர்த்தெழுதலைப்**" பெறுவார். **எபி. 11 : 39, 35.** பொதுவான உலக மனுக்குலமானது தேவனை அறியாமல் அல்லது தேவனுக்காக ஜீவிக்காமல் தங்களுக்காக வாழ்ந்தனர். ஆகையினால் அவர்கள் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பெறுவதில்லை. ***

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :*

*Bro. V. Vincent Jeyakumar*

*Laymen's Home Missionary Movement*

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**